விலை: 50.00 viber : 076 636 3378
பக்கங்கள் : பதினாறு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 23 வியாழக்கிழமை (09.12.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 355

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.44, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=



ஹெலிகொப்டர் விபத்து

## இந்திய முப்படை தலைமைத் தளபதி பலி

தமிழகம் நீலகிரியில் சம்பவம்
ஹெலியில் பயணித்த 13 பேர் மரணம்



15

## இலங்கை மற்றும் சீனாவுக்கிடையிலான இரு தரப்பு உறவுகள் தொடர்பில்



### சீனப் பிரதித் தூதுவருடன் சபாநாயகர் கலந்துரையாடல்

(கொழும்பு)

சீன மக்கள் குடியரசின் பிரதித் தூதுவர் 15

## புத்தூர்ச் சந்தியில் விபத்துக்குள்ளான ஆசிரியர் மரணம்

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட புத்தூர்ச் சந்திப் பகுதியில் கடந்த 28ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை இரவு இடம் பெற்ற விபத்தில் சிக்கி 15

## தொல்புரத்தில் கட்டடத்திலிருந்து கீழே விழுந்த சிறுவன் உயிரிழப்பு

### விளையாடிக்கொண்டிருந்தபோது விபரீதம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தொல்புரம் மத்தி பகுதியில் சிறுவன் ஒருவன் நேற்று விளையாடிக் கொண்டிருந்தவேளை கீழே விழுந்து உயிரிழந்துள்ளான்.

குறித்த சிறுவன் அவனது சகோதரனுடன் விளையாடிக் கொண்டிருந்த 15

# வெளிப் பொறிமுறைகளை இலங்கை ஏற்காது

## வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்

(அபுதாபி)

**பலமான உள்நாட்டுப் பொறிமுறைகள் மூலம் வலுவாக முன்னோக்கிச் செல்லும் இவ்வேளையில் இலங்கை எந்தவொரு வெளிப் பொறிமுறையையும் ஏற்றுக் கொள்ளாது என்று வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.**

ஐக்கிய அரபு இராச்சியத்தின் வெளியுறவு மற்றும் பிராந்திய ஒத்துழைப்புக்கான அமைச்சர் ஷக் அப்துல்லா அல்-நஹ்யான் மற்றும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் ஆகியோருக் கிடையில் இடம்பெற்ற சந்திப்பின்போதே இவ்விடயம் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டது.

பலதரப்பு மன்றங்களிலும் குறிப்பாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையிலும் ஐக்கிய அரபு இராச்சியம் இலங் 15



## கொரோனா 28 பேர் பலி

(கொழும்பு)

இலங்கையில் கொரோனாத் தொற்றுக் காரணமாக மேலும் 28 மரணங்கள் பதிவாகியுள்ளது.

அதன்படி, நாட்டில் கோவிட் தொற் 15

## கொரோனா +757

(கொரோனா)

நாட்டில் நேற்று மேலும் 757 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, இலங்கையின் மொத்த கொரோ 15

## பண்டிகைக் காலங்களில் அவதானத்துடன் செயற்படுக

### சுகாதாரத் தரப்பு எச்சரிக்கை

(கொழும்பு)

பண்டிகைக் காலங்களில் மிகவும் அவதானத்துடன் செயற்படுமாறு மக்களை கேட்டுக்கொள்வதாக பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் 15

## யாசகம் எடுக்கும் நிலையில் புனர்வாழ்வளிக்கப்பட்ட போராளிகள்

### பாராளுமன்றில் செல்வம் அடைக்கலநாதன்

(கொழும்பு)

புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளுக்கு உரிய வசதிகளை அரசு செய்துகொடுக்கவில்லை எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதன் காரணமாக பலரும் கையேந்தி பிச்சையெடுக்க வேண்டிய அவலநிலை அவர்களுக்கு ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

பாராளுமன்றில் உரையாற்றிய அவர் 15

## எரிவாயு அடுப்பு வெடிப்பு அரசின் இயலாமை

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(அம்பலாங்கொட)

எரிவாயு அடுப்பு வெடிப்பு, எரிவாயு கலவையில் மாற்றம் உட்பட எரிவாயு மோசடிகள் அரசாங்கத்தின் இயலாமையின் பிரதிபலன் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

நுகர்வோரை பாதுகாக்க இருக்கும் நுகர் 15

## நோர்வே தூதுவருடன் கூட்டமைப்பு சந்திப்பு



(கொழும்பு)

நோர்வேயின் இலங்கைக்கான தூதுவர் Trine Jøranli Eskedal மற்றும் துணைத் தூதுவர் ஹில்டே பேர்க் ஹான்சன் ஆகியோரை தமி 15

## மன்னாரில் உயிரிழந்த பெண்ணுக்கு கொரோனா

(மன்னார்)

மன்னாரில் உயிரிழந்த 59 வயதுப் பெண் ஒருவருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் அவருக்கு கொரோ 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வீடு காணி விற்பனைக்கு**

ஊரெழு கணேச பாடசாலையின் பின்புறம் 8 பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு. (4, 4 பரப்பு)

தொடர்பு
**077 147 1000**

(8983)

# டொலரின் பெறுமதியை மத்திய வங்கி பேணாததால்

## அந்நிய செலாவணி நெருக்கடி அதிகரிப்பு
## பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா

(கொழும்பு)

அமெரிக்க டொலரின் உண்மையான பெறுமதியை மத்திய வங்கி பேணாததன் காரணமாகவே இலங்கையில் அந்நிய செலாவணி நெருக்கடி அதிகரித்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டுள்ள நாணயமாற்று விகிதங்கள் வெளிநாட்டு நாணயங்களின் உண்மையான பெறுமதியை பிரதிநிதித்துவப்படுத்தாத காரணத்தினால் கடந்த சில மாதங்களில் இலங்கைக்கான பணப்பரிமாற்றங்கள் பாதியாக குறைந்துள்ளது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்றில் நேற்று வரவு -- - செலவுத் திட்ட குழு விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வெளிநாட்டு நாணயத்தை ரூபாயாக மாற்றுமாறு இந்த நாட்டு மக்களுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார். (ம)

## 2 வயதுக் குழந்தை உட்பட
# வடக்கில் நேற்று மேலும் 10 பேருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் 2 வயதுப் பெண் குழந்தை உட்பட வடக்கில் மேலும் 10 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று 123 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் குறித்த தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக, சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் 04 பேர் (32, 39, 59, 83 வயதுப் பெண்கள்), யாழ். போதனா வைத்தியசாலையில் 02 பேர் (2 வயதுச் சிறுமி மற்றும் 28 வயதுப் பெண்), வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் 02 பேர் (59 வயது ஆண், 60 வயதுப் பெண்), பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒருவர் (27 வயதுப் பெண்), மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒருவர் (உயிரிழந்த பெண்) ஆகியோருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம)

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை
திருமதி **டேவிகா பகீரதன்** அவர்களின்
அன்பு மாமனார்

அமரர்
## சிதம்பரப்பிள்ளை கணேசமூர்த்தி

அவர்களின் மரணச் செய்திகேட்டு மிகவும் கவலை அடைந்துள்ளோம். இதனால் துயரமடைந்திருக்கும் அவரது குடும்பத்தினர், உற்றார், உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆன்மா இறைவன் சந்நிதியில் இன்புற்றிருக்கப் பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள்**
**யா / இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம் – வரணி**

(C-3205)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
**021 221 7603**
**021 567 1532**

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

**வெளிவாரிப் பரீட்சைகளுக்கு தோற்றுவதற்கான ஆர்வத்தை வெளிப்படுத்தல்**

- கலை முதற் தேர்வு, கலைமாணித் தேர்வு பகுதி - I, பகுதி - II (இறுதிச் சந்தர்ப்பம்)
- வணிக முதற் தேர்வு, இரண்டாம் தேர்வு, மூன்றாம் தேர்வு, நான்காம் தேர்வு
  (புதிய பாடத்திட்டம்) (இறுதிச் சந்தர்ப்பம்)
- வணிக முதற் தேர்வு, வணிகமாணி - பகுதி - I, பகுதி - II பகுதி -III
  (பழைய பாடத்திட்டம்) (இறுதிச் சந்தர்ப்பம்)
- இசைமாணி / நடனமாணி முதலாம், இரண்டாம், மூன்றாம், நான்காம் வருடத்தேர்வு
  (இறுதிச் சந்தர்ப்பம்)

யாழ். பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினால் நடாத்தப்படும் மேற்குறிப்பிட்ட வெளிவாரிப் பரீட்சைகளிற்கு (ஆண்டிறுதிப் பரீட்சை) தோற்றுவதற்காக குறித்த பட்டக்கற்கைநெறிகளுக்கு பதிவுசெய்து இதுவரை பூர்த்திசெய்யாத மாணவர்களுக்கு **இறுதிச்சந்தர்ப்பமாக** இப்பரீட்சைகளினை நடாத்துவதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தீர்மானித்துள்ளது.

மேற்குறிப்பிட்ட தீர்மானத்திற்கு அமைவாக இறுதிச் சந்தர்ப்பமாக இப் பரீட்சைகள் காலாண்டு இடைவெளி அடிப்படையில் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அத்துடன் மாணவர்களின் நலன்கருதி மேற்படி பாடநெறிகளுக்கான துரிதமீட்டல் வகுப்புக்களை யாழ்.பல்கலைக்கழகத்தில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இதற்கு தோற்றவுள்ள மாணவர்களின் எண்ணிக்கை, பாட அலகுகள், மீட்டல் வகுப்புகளிற்கான கட்டணம் மற்றும் பரீட்சைக் கட்டணம் என்பவை தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளும் முகமாக மேற்படி விபரங்களை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலைய இணையத்தளத்தில் இருந்து ( www.cod. jfn.ac.lk) விண்ணப்பப்படிவங்களை பதிவிறக்கம் ( download ) செய்து திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். பதிவுத் தபால் மூலம் அனுப்ப விரும்புவோர் கீழ்க்குறிப்பிடப்பட்ட முகவரிக்கு அனுப்பிவைக்கலாம்.

**பிரதிப் பதிவாளர்,**
**திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி.**

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி **31.12.2021 (வெள்ளிக் கிழமை)** ஆகும். மேலும் மேற்குறிப்பிடப்பட்ட இப்பரீட்சைகள் எக்காரணத்திற்காகவும் மீண்டும் நடாத்தப்படமாட்டாது என்பதனையும் இம் மாணவர்களது கற்கைநெறிக்கான பதிவுகள் யாவும் இப்பரீட்சையின் பின்னர் காலாவதியாகும் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

மேலதிக தகவல்களுக்கு **021 222 3612** என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

**பதிவாளர்**
**08.12.2021**

# கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் அபிவிருத்திச் செயற்பாடுகளில் கரங்கொடுக்கும் கனடா பழைய மாணவர் சங்க செயலாளராக அயராது பணியாற்றும் திருமதி **ஸ்ரீ. ஸ்ரீரங்கநாயகி** அவர்களின் அன்புத் தாயார்

திருமதி
## நித்தியலட்சுமி சோமசுந்தரம்

அவர்கள் இறைபதம் அடைந்தமையை இட்டு யா/வைத்தீஸ்வரா கல்லூரி சமூகத்தினர் ஆகிய நாம் கண்ணீர்ப் பூக்களைத் தூவி அஞ்சலி செலுத்துகின்றோம். அன்னாரின் பிரிவால் துயரடையும் குடும்பத்தினருக்கு எமது ஆறுதல்களைத் தெரிவித்து நிற்கின்றோம். அன்னையின் ஆத்மா சாந்தியடைய வைத்தீஸ்வரப் பெருமானின் பாதம் பணிகின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்**
**யா / வைத்தீஸ்வரா கல்லூரி**

(8979)

## பூநகரி ப.நோ.கூ. சங்கம்
## வாகனங்கள் விற்பனை விளம்பரம்

பூநகரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் பயன்பாட்டில் உள்ள கீழ்வரும் வாகனங்கள் மூடிய கூறுவிலை மூலம் விற்பனை செய்யப் படவுள்ளது.

NE LG 8424 TATA
NP LG 8428 TATA

குறித்த மூடிய கூறுவிலையை 15.12.2021இற்கு முன்பாக **தலைவர், பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், நாகதேவன்துறை வீதி, பூநகரி** என்னும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். குறித்த வாகனங்களை இதே முகவரியிலுள்ள தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம்.

**தா.அரியரத்தினம்,**
**தலைவர்,**
**பூநகரி ப.நோ.கூ. சங்கம், பூநகரி.**

(C-3203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசிற்கு எதிராக கொழும்பில் பேரணி



(கொழும்பு)

**நாட்டின் தேசிய வளங்களை விற்பனை செய்வதற்கு எதிராக கொழும்பில் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்னால் நேற்று இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.**

யுகதனவி மின் நிலையம் அமெரிக்க நிறுவனம் ஒன்றுக்கு வழங்கப்பட்டமைப்பு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் இலங்கை மின்சாரசபை ஐக்கிய தொழிற்சங்க கூட்டணி இந்த போராட்டத்தை முன் னெடுத்துள்ளது.

இந்நிலையில், போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் ஜனாதிபதி செயலகத்தை நோக்கி சென்றுள்ளதாகவும், இதனால் ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக பதற்ற நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)


## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை - பளை
## இறைச்சிக்கடைகள் மற்றும் பழையமுள்ளிப்பற்று உப அலுவலகத்தினை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி அறிவித்தல் 2022

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 09.12.2021 தொடக்கம் 23.12.2021 பிற்பகல் 2.00 மணி வரை (அலுவலக நேரம்)
கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசி திகதி :- 23.12.2021 பிற்பகல் 2.00 மணி
கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி :- 23.12.2021 பிற்பகல் 2.00 மணி
கேள்வி திறக்கப்படும் இடம் :- பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, தலைமை அலுவலகம்

இறைச்சிக்கடைகளுக்கான கேள்வி அட்டவணை

| இல | கடை இல | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்விப்படிவ கட்டணம் |
|---|---|---|---|---|
| புலோப்பளை உப அலுவலகம் | | | | |
| 01. | கோழி இறைச்சிக்கடை | 733,500.00 | 16,000.00 | 2,000.00 |
| 02. | கருவாட்டுக்கடை | 12,500.00 | 5,000.00 | 2,000.00 |
| முள்ளிப்பற்று உப அலுவலகம் | | | | |
| 03. | கோழி இறைச்சிக்கடை | 62,000.00 | 5,000.00 | 2,000.00 |
| 04. | பழைய முள்ளிப்பற்று உ ப அலுவலகம் | 90,000.00 | 5,000.00 | 2,000.00 |

**நிபந்தனைகள்**

01. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
02. கேள்விப்படிவம் பெறவிரும்புவோர் கோரிக்கைக் கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் அதன் பிரதியுடன் சமூகமளிக்க வேண்டும்.
03. கேள்விப்படிவம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை **"தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை"** என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாக இட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி"** என்ற முகவரிக்கு 23.12.2021 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.
04. ஒருவர் ஒரு கடைக்கு மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்.
05. கேள்விச்சித்திதாரராக தெரிவு செய்யப்படுவோர் கேள்வித்தொகை ரூபா. 300,000.00 இற்கு உட்பட்ட தொகையாயின் கேள்வித்தொகையின் 1/2 பகுதியையும், ரூபா. 300,000.00 இற்கு மேற்பட்ட தொகையாயின் 1/3 பகுதியையும் செலுத்தி சபையுடன் ஒப்பந்தத்தினை செய்து கொள்ளவேண்டும். மிகுதி தொகையினை 08 பகுதியாக பிரித்து ஒவ்வொரு மாதக்கட்டணமாக அடுத்தமாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தல் வேண்டும். தவறின் 10% தண்டமாக அறவிடப்படும்.
06. இறைச்சிக்கடைகளிற்கு சபையினால் விதிக்கப்படும் மாத வாடகையினை கேள்வித்தொகையுடன் செலுத்தப்பட வேண்டும்.
07. சித்திகரகுத்தகைதாரர் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைக்கிணங்க நடந்து கொள்ளல் வேண்டும்.
08. கேள்வி திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
09. மாட்டிறைச்சிக்கடைகளை பெறுவோர் சபையினால் அனுமதிக்கப்பட்ட கொல்களத்திலேயே மாடு அறுத்தல் வேண்டும்.
10. கேள்வி பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் தவிசாளர்/ செயலாளருக்கு உண்டு.
11. மேலதிக விபரங்களை பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**சுப்பிரமணியம் சுரேன்**
**தவிசாளர்**
**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை,**
**பளை.**

09.12.2021 (C-320)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநியோகித்த எரிவாயு சிலிண்டர்களை மீளப் பெற லிட்ரோ தீர்மானம்

(கொழும்பு)

வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்களுக்கு விநியோகிக்கப்பட்ட சமையல் எரிவாயு சிலிண்டர்களை மீளப் பெறவுள்ளதாக லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

அதன்படி, கடந்த 4 ஆம் திகதிக்கு முன்னதாக வீடுகள் மற்றும் சந்தைக்கு விநியோகிக்கப்பட்ட சமையல் எரிவாயு சிலிண்டர்கள் தொடர்பில் நுகர்வோர் அதிருப்தி வெளியிட்டிருந்தனர்.

இதற்கமைய, லிட்ரோ நிறுவனம் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

மேற்படி, திகதிக்கு முன்னதாக விநியோகிக்கப்பட்ட முத்திரை அகற்றப்படாத சமையல் எரிவாயு சிலிண்டர்கள் மீளப் பெற்றுக்கொள்ளப்படும் என லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது. (4)

### ரயில் மோதியதில்
## ஒரே குடும்பத்தை சேர்ந்த மூவர் பலி

(கொழும்பு)

வட்டவளை- ரொசல்ல பகுதியில் தொடரூந்து மோதி 3 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முற்பகல், ரொசல்ல ரயில் நிலையத்துக்கு அருகில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை, தாய் மற்றும் மகன் ஆகியோரே உயிரிழந்தனர்.

தொடரூந்து வரும் வேளையில், கடவையை கடக்க முயற்சித்தபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (4)

## மருதமுனை கடற்கரையிலும் கரையொதுங்கியது சடலம்



(கல்முனை)

கல்முனை - மருதமுனை கடற்கரையில் நேற்று சடலம் ஒன்று அடையாளம் காண முடியாத நிலையில் உருக்குலைந்து கரையொதுங்கியுள்ளது.

இந்நிலையில், கல்முனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4)

## சிலிண்டர்களை விநியோகிக்கும் நிறுவனங்களுக்கு எதிராக வழக்கு

(கொழும்பு)

எரிவாயு சிலிண்டர்களை விநியோகம் செய்யும் இரண்டு நிறுவனங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்தார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் கலந்து கொண்டே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

சிலிண்டர் நிறுவனத்தின் பொறுப்பினை உரிய வகையில் மேற்கொள்ளத் தவறியமை வருத்தமளிக்கும் விடயம் எனவும் அவர் தெரிவித்தார். (4)

# தெற்காசிய உதைபந்தாட்ட போட்டி
## மகாஜன வீராங்கனைகள் நால்வர் தெரிவு

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் இருந்து தெற்காசிய போட்டிக்கு 4 வீராங்கனைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் உப தலைவியாக சி.தர்மிகாவும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.



நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை 19 வயதுப் பிரிவினருக்கான தெற்காசிய உதைபந்தாட்ட போட்டிகள் பங்களாதேஷில் நடைபெறவுள்ளது.

பங்களாதேஷில் நடைபெறவுள்ள 19 வயதுப் பெண்களுக்கான தெற்காசிய உதைபந்தாட்ட வெற்றிக் கிண்ண போட்டியில் பங்குபற்றும் இலங்கை தேசிய 19 வயதுப் பெண்கள்அணியில் மகாஜனக்கல்லூரி வீராங்கனைகளான சி.தர்மிகா, உ.யோகிதா, ர.கிருசாந்தினி, ம.வலன்ரீனா ஆகிய நான்கு வீராங்கனைகள் இந்த அணியில் இடம் பிடித்துள்ளதுடன், அணியின் உப தலைவியாக சி.தர்மிகாவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த தேசிய அணியின் பொறுப்பாசிரியராக மகாஜனக் கல்லூரியின் பெண்கள் அணியின் பொறுப்பாசிரியர் செல்வி. பத்மநிதி செல்லையா நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் தர்மிகா 2019 ஆம் ஆண்டு தேசிய மட்ட சாம்பியனாகிய மகாஜனக் கல்லூரியின் 20 வயதுப் பெண்கள் அணிக்கு தலைமை தாங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் சி.தர்மிகா 2015 ஆண்டில் நேபாளத்தில் நடைபெற்ற 14 வயது பெண்களுக்கான தெற்காசிய உதைபந்தாட்டப் போட்டியில் இலங்கை அணியில் இடம் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

மேலும் யோகிதா, கிருசாந்தினி ஆகியோர் 2017 ஆண்டில் இலங்கையில் நடைபெற்ற 14 வயது பெண்களுக்கான தெற்காசிய உதைபந்தாட்டப் போட்டியிலும் இந்தியாவில் நடைபெற்ற சுற்றுலாப் போட்டியிலும் இலங்கை அணி சார்பாக பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது. (4-90)





தைக்கொண்டோ போட்டியில் ஆண்கள் பிரிவில் முல்லைத்தீவு மாவட்ட அணியும் பெண்கள் பிரிவில் மன்னார் மாவட்ட அணியும் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டனர்.

வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் நடத்தும் ஆண்கள் பெண்களுக்கான தைக்கொண்டோ போட்டிகள் அண்மையில் மன்னார் உள்ளக விளையாடரங்கில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (படங்கள்-கனகராஜா)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2464

### சியாமிலா



காதோரம் லோலாக்கு கதை சொல்லுதய்யா




லோலாக்கு எங்கம்மா கதை சொல்லுது காதோரம் கொசுவும் ஈயும் தா கொய் கொய்ங்னு சுத்தி கொல்லுது..

### கோபிநாத்



அண்டாவ வச்சி தண்ணி அடிக்க சொன்னதுக்கு அடகு கடையில வைச்சிட்டு தண்ணி அடிச்சிட்டா வர்ற?

### விஜிதா

Me : ஆண்டவா பிரச்சினையை சமாளிக்குற மன தைரியத்தை எனக்கு கொடுப்பா




God : பிரச்சினையை தான் என்னால குடுக்க முடியும்... அத நீ தான் சமாளிக்கனும்

### அமீர்



இன்னார்க்கு இன்னார் என்று எழுதி வைத்தானே தேவன் அன்று




very சாரி நான் அப்படி எதுவுமே எழுதல

### அர்ச்சனா



நீயும் என்ன நீங்கி போனா நிலவானம் கண்ணீர் சிந்தும்




எவளோ உன்ன விட்டுட்டு போனதுக்கு நான் ஏன் டா கண்ணீர் சிந்த போறேன்

### சஞ்சீவ்

ஒரே நாடு ஒரே சட்டம் இது பழசு



ஒரே நாடு ஒரே இருட்டு இது புதுசு

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்றில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பிலான விசாரணைக்கு குழு நியமிப்பு

**(கொழும்பு)**

**பாராளுமன்றில் கடந்த 3 மற்றும் 4 ஆம் திகதிகளில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் கண்டறிந்து பரிந்துரைகளை முன்வைக்க சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தனவினால் குழு நியமிக்கப்பட்டுள்ளது.**

நேற்றுக்காலை பாராளுமன்றம் ஆரம்பமானதை தொடர்ந்து பிரதி சபாநாயகர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தலைமையில் இந்தக் குழு நியமிக்கப்பட்டதாக சபாநாயகர் தெரிவித்தார்.

பிரதி சபாநாயகர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தலைமையிலான இக்குழுவில் பாராளுமன்ற உறுப்பினர்களான சமல் ராஜபக்ஷ, பந்துல குணவர்தன, வாசுதேவ நாணயக்கார, சுசில் பிரேமஜயந்த, கயந்த கருணாதிலக, ரவூப் ஹக்கீம், அனுர பிரியதர்ஷன யாப்பா, விஜித ஹேரத், ரஞ்சித் மத்தும பண்டார மற்றும் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் ஏனைய உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். (4)

# வெளிநாடு செல்லும் பணியாளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையில்இருந்துவேலை வாய்ப்புக்காக வெளிநாடு செல்லும் பணியாளர்களின் எண்ணிக்கையில் மேலும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

அந்த வகையில் இந்த வருடத்தில் பதிவு செய்யப்பட்ட வெளிநாடு செல்லும் பணியாளர்களின் எண்ணிக்கை, ஒரு இலட்சத்தை கடந்துள்ளதாக பணியகம் சுட்டிக்காட்டியுள்ளது.

ஒவ்வொரு வருடமும் சராசரியாக 2 இலட்சத்துக்கும் அதிகமான இலங்கையர்கள் வேலைவாய்ப்புக்காக வெளிநாடுகளுக்குச் செல்கின்றனர்.

ஆனால் கடந்த வருடம் கொரோனா அச்சுறுத்தல் காரணமாக 53 ஆயிரமாக அதன் எண்ணிக்கை குறைந்திருந்ததாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் குறிப்பிட்டுள்ளது. (4)

# பேர்ள் கப்பல் தீ விபத்து; 13,832 மீனவர்களுக்கு இழப்பீடு



(கொழும்பு)

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் ஏற்பட்ட தீ விபத்தினால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட 13 ஆயிரத்து 832 மீனவர்களுக்கு முதற்கட்டமாக இழப்பீடு வழங்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

எதிர்வரும் 2022 ஆம் ஆண்டுக்கான கடற்றொழில் அமைச்சின் மீதான வரவு-செலவுத் திட்டத்தின் குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு, கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொழும்பில் 2 ஆயிரத்து 956 மீனவர்களுக்கும் கம்பஹா மாவட்டத்தில் 10 ஆயிரத்து 175 மீனவர்களுக்கும் மற்றும் களுத்துறையில் 701 மீனவர்களுக்கும் இழப்பீடு வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்நிலையில், முதற்கட்ட இழப்பீடுத் தொகை வழங்கப்படாத 1,200 மீனவர்களின் தகவல் உறுதி செய்யப்பட்டதைத் தொடர்ந்து அவர்களுக்கும் இழப்பீட்டுத் தொகை வழங்கப்படும் என அவர் உறுதியளித்தார். (4)

# பூஸ்டர் பெற்றுக்கொண்டோர் தொகை பத்து இலட்சத்தைக் கடந்தது

(கொழும்பு)

நாட்டில் பைஸர் மூன்றாம் கொவிட்-19 தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்களின் மொத்த எண்ணிக்கை 10 இலட்சத்தை கடந்துள்ளதாக தொற்று நோய் விஞ்ஞான பிரிவு தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் 37,578 பேருக்கு பைஸர் மூன்றாம் தடுப்பூசி செலுத்தப்பட்டதை அடுத்து இந்த எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

அதேநேரம் 40,347 பேருக்கு கொவிட்-19 தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளதாகத் தொற்று நோய் விஞ்ஞான பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன், 755 பேருக்கு பைஸர் முதலாம் தடுப்பூசியும், 313 பேருக்கு இரண்டாம் தடுப்பூசியும் செலுத்தப்பட்டன.

மேலும் 409 பேருக்கு சினோபார்ம் முதலாம் தடுப்பூசியும், 1,238 பேருக்கு இரண்டாம் தடுப்பூசியும் செலுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது (4)

# இன்று ஒரு தகவல்

## நல்ல மகனாக நடந்து கொள்வது எப்படி?

ஒருவரைப்பற்றிய உண்மையான தன்மைகளை அறிந்து கொள்ள வேண்டுமென்றால் அவர் தம் பெற்றோரிடம் எப்படி நடந்து கொள்கிறார் என்பதை வைத்தே சொல்லி விடலாம்.

சிறு பிள்ளையாக இருக்கும்போது ஆசைப்பட்டவற்றை எல்லாம் அடைய முயல்வது இயல்பு. அது அறியாப் பருவம். கொடுக்கக்கூடியதாய் இருந்தால் விரும்பும் பொருளைக் கொடுத்தும் கொடுக்க இயலாத பொருளாக இருந்தால் குழந்தையின் கவனத்தை திசை திருப்பி விடுவதும் பெற்றோர் இயல்பு. ஆனால் வளர்ந்து விட்ட பிறகும் விரும்பியவற்றையெல்லாம் அடைய முயல்வது தவறு.

அங்கே பெற்றோர்கள் நன்மை காரணமாகக் குறுக்கே நிற்கும்போது அவர்களே சிலருக்கு எதிரிகள் போல் தோற்றம் அளிக்கிறார்கள்.

இதனால் இத்தகையவர்கள் பெற்றோர்களை வெறுக்க ஆரம்பிக்கிறார்கள். இந்தச் சிறிய நெருப்பு காட்டுத்தீ போல் பரவி இல்லாத-பொல்லாத விளைவுகளை உண்டு பண்ணுகிறது. அன்பும் பாசமும் அற்றுப்போகின்றன.

இத்தகைய மகன்கள் உடலால் வளர்ந்திருக்கிறார்களே தவிர உள்ளத்தால் வளரவில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

கீழ்ப்படிந்து போதல் என்பது அடிமைத்தனம் அல்ல. அதேபோல் அடங்காமல் போவது சுதந்திரமல்ல. நம் நன்மை கருதித்தான் தடையானது எழுப்பப்படுகிறது என்பதை ஏனோ இவர்கள் உணர்வதில்லை.

ஒருவேளை பெற்றோர்களின் முடிவு தவறாக இருக்கலாம். அதை அவர்கள் உணரும்படி எடுத்துச் சொல்லலாம். அல்லது மற்றவர்கள் மூலம் சொல்ல வைக்கலாம். அதோடு மகனின் உரிமை முடிந்து விடுகிறது.

அவர்கள் குற்றச்சாட்டுக்கள் நம் நன்மைக்கே என்பதை உணர வேண்டும். அவர்கள் எடுக்கும் முடிவு நம்மைக் கெடுப்பதற்காக என்று எண்ணுவதைத் தவிர்க்க வேண்டும்.

எத்துணை செல்வமும் உயர் பதவியும் புதுமனைவியும் வந்தாலும் நீங்கள் நீங்களாகவே இருக்க வேண்டும். பெற்றோர்களுக்கு உரிய பற்றும் பாசமும் உரிய மரியாதையும் சற்றும் குறையவிடக்கூடாது.

நாம் வாழ்வது அவர்களால்; நாம் உயர்ந்ததும் அவர்களால்; நம் திறமை அவர்களால்; எல்லாமே அவர்களால் என்னும் எண்ணம் உள்ளத்தில் லப்டப் ஒலிபோல் எந்நேரமும் ஒலித்துக் கொண்டிருக்க வேண்டும்.

அவர்கள் நமக்கு ஆற்ற வேண்டிய கடமைகள் முடிந்து விட்டன. அல்லது அவற்றை அவர்கள் நமக்கு முறையாக ஆற்றிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் நாம் அவர்களுக்கு ஆற்ற வேண்டிய கடமைகளை முறைப்படி செய்தோமா என்ற உணர்வு ஒவ்வொரு மகனுக்கும் இருக்க வேண்டும்.

அவர்களுக்கு பணக் கஷ்டமோ மனக் கஷ்டமோ வராமல் பார்த்துக் கொள்வதைத் தனது தலையாய கடமையாக வைத்துக் கொள்ள வேண்டும்.

சுற்றிவளைக்காமல் சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் என் தாயும் தந்தையும் என்னை எண்ணும்போது பெருமையடைகிறார்களா?

என் தாயும் தந்தையும் என்னை எண்ணும்போது மகிழ்ச்சியாவது அடைகிறார்களா? என்ற இந்த இரண்டு கேள்விகளை ஒவ்வொரு மகனும் தன் நெஞ்சைத் தொட்டுக் கேட்க வேண்டும்.

ஆம் என்பது மனச்சாட்சியின் பதிலாக இருக்குமானால் அவனே நல்ல மகன்.

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்கள் முன்மாதிரியாக செயற்பட வேண்டும்

## வட மாகாண கல்வி அமைச்சு

(யாழ்ப்பாணம்)

கொவிட்-19 நோய்த்தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் வகையில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவதில் ஆசிரியர்கள் முன்மாதிரியாகச் செயற்படவேண்டும் என்று வடக்கு மாகாண கல்வி அமைச்சு வலியுறுத்தியுள்ளது.

வடக்கு மாகாண பாடசாலைகளில் ஆசிரியர்கள் சிலர் முகக்கவசம் அணிவது உள்ளிட்ட சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவதில்லை என்று முறைப்பாடுகள் கிடைக்கின்றன. சுகாதார நடைமுறைகளை உரியவகையில் பேணியவாறு பாடசாலைகளை மீள ஆரம்பிக்க சுகாதார அமைச்சினால் கண்டிப்பான அறிவுறுத்தல்கள்வழங்கப்பட்டுள்ளன.

எனவே ஆசிரியர்கள் சுகாதார வழிகாட்டுதல்களை உரியவாறு கடைப்பிடிக்கும் போது தான் மாணவர்களும் அவற்றைப் பின்பற்றுவர்கள். அதற்கான அறிவுறுத்தல்கள் அதிபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. கோவிட்-19 நோய்த்தொற்றின் பரவல் தீவிரமடைந்துள்ளது என்று சுகாதார அமைச்சு அதிகாரிகள் தகவல் வழங்கியுள்ளனர். எனவே சுகாதார நடைமுறைகளை உரிய வகையில் பின்பற்றுவதன் ஊடாகவே மாணவர்களின் கல்வி மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளை தொடர்ந்து கொண்டு செல்ல முடியும்.

அதேவேளை பொதுப்போக்குவரத்து சேவைகளில் பயணிக்கும் மாணவர்கள் முகக்கவசம் அணிவதனை நடத்துனர்கள் கண்காணிக்க வேண்டும். அவை தொடர்பிலும் முறைப்பாடுகள் கிடைக்கின்றன. பாடசாலைகளில் சுகாதார நடைமுறைகள் பின் பற்றுவதனை உறுதி செய்ய கண்காணிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்" என்றும் வடக்கு மாகாண கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (5-6-33)

# அரியாலைப் பகுதியில் மோட்டார் குண்டு மீட்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அரியாலை - புங்கன்குளம் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து சிறியரக மோட்டார் குண்டு மீட்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை வீட்டு உரிமையாளரால் குப்பைகளை புதைப்பதற்காக கிடங்கு ஒன்று வெட்டப்பட்ட சமயத் திலே அக்கிடங்கிலிருந்து குண்டு ஒன்று மீட்கப்பட்டது.

இதனையடுத்து யாழ். பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. பொலிஸார் நீதிமன்ற உத்தரவைப் பெற்று குண்டை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.(5-33-104)

# ஈச்சமோட்டை மறவர்குளம் புனரமைப்பு பணிகள் ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர முதல்வர் வி.மணிவண்ணனின் "தூய அழகிய நகரம்" திட்டத்தின் தொடர்ச்சியாக தியாகி அறக்கொடை நிறுவனத்தின் தலைவர் வாமதேவன் தியாகேந்திரனின் நிதி அனுசரணையுடன் மறவர்குளம் துரித அபிவிருத்தித் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது .

யாழ்.மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் தலைமையில் இத்திட்டத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டதுடன், வேலைத்திட்டம் தொடர்பான பதாகையும் நேற்று திரை நீக்கம் செய்யப்பட்டது.

தொடர்ந்து குளத்தின் மாதிரித்திட்ட வரைபும் மக்கள் பார்வைக்காக வெளியிட்டு வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் யாழ். மாநகர சபையின் பிரதி முதல்வர் து.ஈசன், மாநகர ஆணை யாளர் இ.ஜெயசீலன், மாநகரசபை செயலாளர், மாநகர சபை உறுப்பினர்கள், மாநகர சபை உத்தியோகத் தர்கள், பிரதேச மக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (5-6-18-33-104)

உலக மண் தினத்தினை முன்னிட்டு, எதிர்காலத்தை நோக்கி சுற்றுச் சூழல் கழகமும் மாகாண கல்வி திணைக்களமும் இணைந்து நடத்திய பொது அறிவுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குரிய பரிசளிப்பு நிகழ்வு நேற்று முன் தினம் வடமாகாண மாகாண கல்வி திணைக்கள மகாநாட்டு மண்டபத்தில் பிரதி கல்விபணிப்பாளர் (விவசாயம்) திருமதி .வேழினி பாலேந்திரா தலைமையில் நடைபெற்றது. (படம்-சிவசாந்தன்.ரவிசாந்)




# போதைப்பொருள் தடுப்பு தொடர்பில் செயலமர்வு

(குப்பிழான்)

மதுசாரம் மற்றும் போதைப் பொருள் நிலையத்தின் ஏற்பாட்டில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான போதைப் பொருள் தடுப்புத் தொடர்பான செயலமர்வு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ். மாவட்டச் செயலக முகாமைத்துவத் திறன் அபிவிருத்தி பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது.

உதவி மாவட்டச் செயலாளர் திருமதி.எஸ்.சி.என்.கமலராஜன் தலைமையில் இடம்பெற்ற குறித்த பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்டு உதவி மாவட்டச் செயலாளர் கருத்துத் தெரிவிக்கையில், பிரதேச செயலகத்திற்கு வரும் பொதுமக்களுக்குப் புகைப்பிடித்தல், மதுபானம் மற்றும் போதைப் பொருள் பாவனைக்கு எதிராக விழிப்புணர்வினை வழங்குதலிற்கான அடிப்படை அறிவு இப் பயிற்சிப்பட்டறை ஊடாக வழங்கப்படுகிறது. .உங்களால் சமூகத்தில் பலதரப்பட்ட மாற்றங்களை ஏற்படுத்த முடியும். அனைத்து நிகழ்வுகளிலும் இது சார்ந்த விழிப்புணர்வுகளை வழங்குதல் வேண்டும் எனவும் தெரிவித்தார்.

மேற்படி செயலமர் வில் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் மாவட்ட இணைப்பாளர் திருமதி. அ.சியாமினி, வடக்கு மாகாண இணைப்பாளர் .ஏ.கோடீஸ்வரன் மற்றும் தெரிவு செய்யப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (4-5-18)

# சேர். பொன் இராமநாதனின் 91 ஆவது குருபூசை அனுஷ்டிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் ஸ்தாபகத்துக்கு அடித்தளமான பரமேஸ்வராக் கல்லூரியின் நிறுவுனரும், சைவப் பெரு வள்ளலாருமான சேர். பொன் இராமநாதனின் 91 ஆவது குருபூசை நேற்று புதன்கிழமை காலை இடம் பெற்றது.

பல்கலைக்கழகத்தினுள் அமைந்துள்ள சேர். பொன். இராமநாதனின் உருவச் சிலைக்கு, துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா மலர்மாலை அணிவித்து, வணக்கம் செலுத்தினார்.

இந்நிகழ்வில், பேராசிரியர் சி. சிற்றம்பலம் மற்றும் வாழ் நாள் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, பதிவாளர் வி.காண்டீபன், இந்து கற்கைகள் பீடத்தைச் சேர்ந்த முன்னாள் துறைத் தலைவர் பேராசிரியர் எம். வேதநாதன், ஆகியோர் கலந்து கொண்டனர். (5-6-18-33-104)

# யாழ்.மாநகர சபையின் நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் வரி யிறுப்பாளர்களின் நன்மை கருதி, நாளை 10 ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை நடமாடும் சேவை நாவாந்துறை கிராம உத்தியோகத்தர் அலுவலகத்தில் நடைபெறும்.

வட்டாரம் 1,18,19,20,21 மற்றும் ஏனைய வட்டாரங்களிற்கான பெயர் மாற்ற விண்ணப்பப் படிவம் வழங்கல், துவிச்சக்கர வண்டி உரிமம் வழங்கல் ஆதன வரி அறிவித்தல் மற்றும் அவை தொடர்புபட்ட ஆலோசனைகள் போன்ற சேவைகளைப் பெற்றுக் கொள்வதுடன் அனைத்து வட்டாரங்களினதும் இதுவரை காலமும் செலுத்தப்படாதுள்ள சோலை வரி நிலுவைகள் மற்றும் நடப்பாண்டு சோலை வரி, பொது நீர்க்கம்பங்களிற்கான கட்டண அறவீடுகள், தனியார் நீர் இணைப்புக் களின் நிலுவை போன்றவற்றை செலுத்துமாறு யாழ்.மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் அறிவித்துள்ளார். (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 29 கோடி பெறுமதியான தங்கத்துடன் இலங்கையர் ஒருவர் கைது

(சென்னை)

29 கோடி ரூபாய் பெறுமதியான தங்கத்தை கடத்த முயன்ற இலங்கையர் ஒருவர் சென்னை விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் கடத்தி வந்த 690 கிராம் தங்கத்தை சென்னை விமான நிலைய சுங்கத்துறை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். (4)


## அரசாங்க அறிவித்தல்

### மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்

### நிர்மாணதாரர்கள் மற்றும் வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான கால நீடிப்பு

2021.11.09 ஆம் திகதிய வலம்புரி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 2022 ஆம் ஆண்டிற்கான நிர்மாணதாரர்கள் மற்றும் வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான இறுதித்திகதி 2021.12.20 ஆம் திகதி வரை கால நீடிப்பு செய்யப்பட்டுள்ளது.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக்குழு,**
**மாவட்ட செயலாளருக்காக,**
**மாவட்டச் செயலகம்,**
**யாழ்ப்பாணம்**

(சி-3197)


# ஒரு லட்சம் மாணவர்களுக்கான வேலைத்திட்ட ஆட்சேர்ப்பு ஆரம்பம்

(கொழும்பு)

க.பொ.த.சாதாரணதரத்தைப் பூர்த்தி செய்த ஒரு இலட்சம் மாணவர்களுக்கான வேலைத் திட்ட ஆட்சேர்ப்பு தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சமுர்த்தி, நுண்நிதி, சுயதொழில் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் உரையாற்றிய போதே செஹான் சேமசிங்க இதை தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

2015 - 2019 காலப்பகுதியில் அரச சேவைக்கு வழங்கப்பட்ட மொத்த வேலை வாய்ப்புகளின் எண்ணிக்கை 22,145 ஆகும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ் ஆட்சிக்கு வந்த பின்னர் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு மாத்திரம் 60,000 பட்டதாரி நியமனங்கள் வழங்க ப்பட்டுள்ளன.

மேலும், க.பொ.த. சாதாரண தரம் வரை படித்த அல்லது க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடையாத ஒரு இலட்சம் இளைஞர், யுவதிகளை இணைத்துக் கொள்ளும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (4)


# நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்

## 2022ம் ஆண்டிற்கான 2வது தடவை மீள்கேள்வி அறிவித்தல்

நல்லூர் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் சந்தை மற்றும் இறைச்சிக் கடைகள், என்பவற்றை 01.01.2022ஆம் திகதி தொடக்கம் 31.12.2022ஆம் திகதி வரை குத்தகைக்கு விடுவதற்கான கேள்விகள் கோரப்பட்டுள்ளன.

கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் : 10.12.2021 - 20.12.2021 திங்கட்கிழமை பி.ப 2.00 மணி வரை

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதி : 21.12.2021 செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணி வரை

கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி : 21.12.2021 செவ்வாய்க்கிழமை மு.ப 11.00மணிக்கு

கேள்விப்பத்திரம் திறக்கப்படும் இடம் : கலந்துரையாடல் மண்டபம், தலைமை அலுவலகம், நல்லூர் பிரதேச சபை.

2022ம் ஆண்டுக்கு சந்தை மற்றும் இறைச்சிக்கடைகளுக்கான குத்தகை அட்டவணை

| இல | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த தொகை (வற்வரி தவிர்ந்த) ரூபா. |
|---|---|---|---|---|
| | நல்லூர் உப அலுவலகம் | | | |
| 1 | திருநெல்வேலிச்சந்தை (துவிச்சக்கர வண்டிப்பாதுகாப்பு நிலையத்துடன்) | 1,000.00 | 15,000.00 | 29,326,044.00 |
| 2 | திருநெல்வேலிச்சந்தை கோழியிறைச்சிக் கடை இல 01. | 500.00 | 5,000.00 | 110,250.00 |
| 3 | திருநெல்வேலிச்சந்தை கோழியிறைச்சிக் கடை இல 02. | 500.00 | 5,000.00 | 139,350.00 |
| | கொக்குவில் உப அலுவலகம் | | | |
| 4 | கொக்குவில் சந்தை கோழியிறைச்சிக் கடை | 500.00 | 5,000.00 | 405,000.00 |
| 5 | கோண்டாவில் ஸ்ரேசனடி ஆட்டிறைச்சிக் கடை இல 02 | 500.00 | 5,000.00 | 128,350.00 |
| 6 | கொக்குவில் உப அலுவலக மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 5,000.00 | 1,692,300.00 |
| 7 | கோண்டாவில் ஸ்ரேசனடி மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 5,000.00 | 800,200.00 |

1. கேள்விப்பத்திரங்கள் மூன்று பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதியுட்பட இரு பிரதிகளை தவிசாளர், நல்லூர் பிரதேச சபை, 14/5.கருவப்புலம் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு, தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு, பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். மூன்றாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும்.
2. தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் கேள்வித்தொகையின் 1/3 பகுதியை 2021.12.28ம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ள வேண்டும்.
3. நாளொன்றுக்கு சந்தையில் தள வாடகையாக (வியாபாரிகளுக்கென ஒதுக்கப்பட்ட இடம்) ரூபா 80/= மட்டுமே அறவிடப்பட முடியும்.
4. துவிச்சக்கரவண்டிக்கு ரூபா 5/= உம் மோட்டார் சைக்கிளுக்கு ரூபா 10/=உம் மட்டுமே பாதுகாப்புக் கட்டணமாக அறவிடப்படல் வேண்டும்.
5. **கேள்வி தொடர்பான மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.**

**திரு ப.மயூரன்**
**தவிசாளர், நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்**

(சி-3198)


# வீதிகளில் துப்பினால் கடும் நடவடிக்கை

(கொழும்பு)

வீதிகளில் ஆங்காங்கே வெற்றிலையை சாப்பிட்டு எச்சில் துப்பும் நபர்களுக்கு எதிராக கடுமையாக சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

வீதிகளில் ஆங்காங்கே எச்சில் துப்புவதால், கடும் அசுத்தம் ஏற்படுவதுடன் கொரோனா போன்ற வைரஸ் தொற்று நோய் பரவுவதற்கு காரணமாக அமைந்துள்ளது.இதனால், சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியவதன் அவசியம் தொடர்பில் தெளிவுப்படுத்தப்பட்டுள்ளது.குற்றவியல் தண்டனை சட்டத்திற்கு அமைய இந்த குற்றத்தை செய்யும் நபரை கைது செய்து, நீதிமன்றத்தில் வழக்கு தொடர முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

# அமைச்சர்கள் குறித்த அறிக்கையை சமர்ப்பிக்கவும்

## உயர் நீதிமன்று சட்டமா அதிபருக்கு உத்தரவு

(கொழும்பு)

அமைச்சரவை மற்றும் இராஜாங்க அமைச்சர்களின் எண்ணிக்கை குறித்த அறிக்கையை இரண்டு வாரங்களுக்குள் சமர்ப்பிக்குமாறு சட்டமா அதிபருக்கு உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

தற்போதைய அமைச்சரவையின் நியமனம் அரசியலமைப்பின் விதிகளை மீறுவதாகத் தெரிவிக்கப்பட்டு, பொறியியலாளர் கபில ரேணுகாவினால் அடிப்படை உரிமைகள் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டது.

இந்நிலையில் அம்மனு மீதான பரிசீலனை நேற்று உயர் நீதிமன்ற நீதியரசர்கள் விஜித மலல்கொட, யசந்த கோதாகொட மற்றும் மகிந்த சமயவர்தன ஆகியோர் அடங்கிய மூவரைக் கொண்ட குழாம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போதே மேற்கண்ட உத்தரவு சட்டமா அதிபருக்கு பிறப்பிக்கப்பட்டது.

அதேநேரம் இம்மனு மீதான பரிசீலனையினை மீண்டும் 2022 ஜனவரி 27 ஆம் திகதி எடுத்துக் கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது. (4)

# கஞ்சா ஏற்றுமதி பிரேரணை பாராளுமன்றில் நிறைவேற்றம்

(கொழும்பு)

கஞ்சாவை ஏற்றுமதி செய்வது குறித்த அவை ஒத்தி வைப்பு பிரேரணை பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்டது.

நேற்று முன்தினம் இந்த பிரேரணை பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்டது.

கஞ்சாவை ஏற்றுமதிக்காக பயிரிடுவதற்கு தேவையான சட்டங்கள் விரைவில் உருவாக்கப்பட வேண்டுமென இந்த அவை ஒத்தி வைப்பு பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினரும் தற்பொழுது ஆளும் கட்சியில் இணைந்து கொண்டுள்ள வருமான டயனாகமகே இந்த பிரேரணையை முன்மொழிந்தார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களுக்கு எதிரான வன்முறையினை இப்போதே நிறுத்துவோம்

பெண்களுக்கு எதிரான வன்முறை வாரமானது கார்த்திகை 25 தொடக்கம் மார்கழி 25 வரையாகும்



பெண்களுக்கு எதிரான வன்முறை வாரமானது கார்த்திகை 25 தொடக்கம் மார்கழி 25 வரை ஐக்கிய நாடுகள் சபையினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. கடந்த 30 வருட காலமாக இவ்வாரமானது பல்வேறு மட்டங்களிலும் விழிப்புணர்வினை ஏற்படுத்தும் நோக்கிற்காக ஒவ்வொரு தொனிப்பொருளை அடிப்படையாகக்கொண்டு ஏற்பாடு செய்வது வழமையாகும். அந்தவகையில் இந்த வருட தொனிப்பொருள் "பெண்களுக்கு எதிரான வன்முறைகளை இப்போதே நிறுத்துவோம்" என்பதாகும்.

பல்வேறுபட்ட சர்வதேச தினங்கள் அத்தினம் சார் முக்கியத்துவப்படுத்தலுக்காகவும் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காகவும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. பெண்களுக்கு எதிரான வன்முறைசார் விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்காக 16 நாட்களை பிரகடனப்படுத்தியுள்ளமை குறியீட்டு ரீதியாக பெண்கள் வன்முறைக்கு எதிராக செயற்பட வேண்டியதன் அவசியத்தினை முக்கியப்படுத்தியுள்ளது. பெண்களுக்கு எதிரான வன்முறைகளை தடுப்பதற்கான போதிய நிதியினை ஒதுக்கீடு செய்வதற்கான அவசியம், வன்முறைக்குட்பட்ட பெண்களுக்கான சேவைகளை வழங்குவதற்கான கட்டமைப்புகளை உருவாக்கல், தேவையான தரவுகளை திரட்டல், கோவிட்-19 காலப்பகுதியில் குறிப்பாக உள்ளிருப்புக் காலம் மற்றும் பொருளாதார நெருக்கீடுகளால் ஏற்படும் வன்முறைகளை தடுத்தல், வன்முறைகளுக்கான அடிப்படைக் காரணங்களை அடையாளம் கண்டு தடுப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான திட்டங்களை உருவாக்க வேண்டியதன் அவசியத்தினை வலியுறுத்துதல் என்பனவற்றுக்கான குரலை ஓங்கி ஒலிப்பதற்கான செயற்பாடுகள் இந்த வாரத்தில் பொதுவாக முன்னெடுக்கப்படுகின்றன.

இலங்கையைப் பொறுத்தவரை இந்த 30 வருட காலப் பகுதியில் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை தடுப்பதற்கு அல்லது குறைப்பதற்கு முறைப்பாட்டு பொறிமுறைகள் நிறுவனங்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் உருவாக்கப்பட்டமை முக்கியமான செயற்பாடு ஆகும். குறிப்பாக பெண்கள், சிறுவர்கள் அபிவிருத்திக்கான இராஜாங்க அமைச்சின் கீழ் உள்ள திணைக்களமான இலங்கைப் பெண்கள் பணியகம் பெண்களை பாதுகாப்பதற்கான கொள்கைகள் மற்றும் பரிந்துரைகள் முன்னெடுப்பதற்கான தேசிய பெண்கள் குழு, பிரதேச செயலகங்களில் உள்ள சிறுவர், பெண்கள் அபிவிருத்தி பிரிவு, பெண்கள் சிறுவர்களுக்கான பொலிஸ் பிரிவு, அரச சார்பற்ற நிறுவனங்கள், மருத்துவமனைகளில் பெண்களுக்கான வன்முறையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான சேவையினை வழங்கும் நட்பு நிலையம், பல்கலைக்கழகங்களில் உருவாக்கப்பட்ட பால்நிலை வன்முறைக்கான முறைப்பாட்டு நிலையம் என்பவை உருவாக்கப்பட்டமை சுட்டிக்காட்டத்தக்கது.

முறைப்பாடு செய்யப்பட்ட பெரும்பாலான வன்முறைகள் அறிமுகமானவர்களால் நடைபெறுகின்றது என்பது மிகவும் மனவருத்தத்திற்குரிய உண்மை. சந்தேக நபர்கள் தொடர்பான சரியான தகவல்களை வழங்க முடியாத நிலையினால் பாதிப்பினை ஏற்படுத்தியவர்கள் சுதந்திரமாக நடமாடும் நிலையில் உள்ள அதேவேளை பாதிக்கப்பட்ட பெண்கள், குடும்பம் மற்றும் சமூக தளங்களில் தூக்கி எறியப்பட்ட நிலையில் காணப்படுகின்றார்கள்.

### பெண்களுக்கெதிரான வன்முறைகள் ஏற்படுவதற்கான காரணங்கள்

மது போதைப்பொருள்பாவனை, வறுமையும் பொருளாதார ரீதியாக ஏனையவர்களைத் தங்கியிருத்தலும், கொவிட்-19 பெருந்தொற்று நிலையில் வன்முறைச் சூழல் மற்றும் வன்முறை மனப்பாங்கு உள்ளவர்களுடன் வீட்டில் இருக்க வேண்டியநிலை, பாதிக்கப்படும் நபர்கள் மௌனமாக இருத்தல், பாதுகாப்பற்ற சூழல், சமூக வலைத்தளங்கள் மற்றும் தொலைபேசிகளின் தவறான பாவனை,பால்நிலை அடிப்படையிலான சமூகமயப்படுத்தல், முரண்பாடுகளுக்கான தீர்வாக வன்முறை என்ற தவறான கற்பிதம், 30 வருடகாலப் போர் மற்றும் நவீன உலகின் போக்கு காரணமாக குடும்ப சமூக கட்டமைப்புகள் தளர்வடைந்தமை என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

### பெண்களுக்கெதிரான வன்முறைகளினை எவ்வாறு தடுக்கலாம்

சமூகத்தில் சகல மட்டங்களிலும் விழிப்புணர்வை ஏற்படுத்துதல், பெண்களை பொருளாதார ரீதியாக வலுப்படுத்தல், கல்வி மற்றும் சமூகம் பற்றிய பொதுவான அறிவைப் பெறுவதற்கான வாய்ப்புகளை உருவாக்குதல், வன்முறைக்கான சுய எதிர்ப்பை வெளிப்படுத்தல், பெண்களுக்கு எதிரான வன்முறைகளை உருவாக்கும் தளங்களை அடையாளம் கண்டு நீக்குதல் மற்றும் சட்ட நடவடிக்கை எடுத்தல் (சட்ட விரோதமான மதுபாவனை விற்பனை நிலையம்), பாதிக்கப்பட்ட பெண்களுக்கான குடும்ப சமூக ஆதரவை ஏற்படுத்தல், உளவளத்துணை வழங்குதல், சட்ட நடவடிக்கைகள் எடுத்தல், பெண்கள் மீது மேற்கொள்ளப்படும் வன்முறைகளுக்கு குரல் கொடுப்பதற்கும் வன்முறைகளைக் குறைப்பதற்கும் மக்களை அணி திரட்டல், ஆபத்து விளைவிக்கும் நபர்கள் மற்றும் இணையத் தளங்களின் தொடர்புகளை ஆரம்ப கட்டத்திலேயே நிறுத்துதல், நம்பிக்கையான நபர்களிடம் தொலைபேசியை திருத்தத்திற்காக கொடுத்தல், வன்முறையால் பாதிக்கப்பட்டவர் ஆரம்ப கட்டத்தில் வெளிப்படுத்தலுக்கான வாய்ப்புகளை உருவாக்கல்

### நீங்கள் அல்லது அறிந்தவர்கள் வன்முறையால் பாதிக்கப்பட்டால் தொடர்புகளுக்கு

பிரதேச செயலக சிறுவர் பெண்கள் அபிவிருத்திப்பிரிவு, சட்ட உதவி ஆணைக்குழு, வைத்தியசாலைகளில் உள்ள நட்பு நிலையம், சிறுவர் பெண்களுக்கான பொலிஸ் பிரிவு, பெண்கள் வன்முறைக்கான அவசர உதவி தொலைபேசி அழைப்பு **1938, Tell IGP** இணையத்தளத்தின் ஊடான பொலிஸ்மா அதிபருக்கான முறைப்பாட்டு முறைமை, **2Six4** ஆபத்து நிலையில் அருகில் உள்ள சேவை வழங்கும் நிறுவனத்தினை அடையாளம் காண்பதற்கான இணையவழிமுறை **( App Play store Download )**

பெண்களுக்கெதிரான வன்முறையானது அந்நியரால் ஏற்படுத்தப்படுகின்றது என்று பொதுவாக நாம் எண்ணினாலும் உண்மையில் பெரும்பாலான வன்முறைகள் அவர்களின் நெருங்கிய உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள், பாதுகாவலர்களினால் அதிகளவில் மேற்கொள்ளப்படுவதாக முறைப்பாடுகள் சுட்டிக்காட்டுகின்றன. இத்தகைய வன்முறையானது தனிப்பட்ட அல்லது பொது இடத்தில் ஏற்படலாம்.

இத்தகைய வன்முறையினை நிறுத்துவதற்கு அதிக நிதி, நிபுணத்துவ ஆலோசனை பல மட்டத்திலான விழிப்புணர்வு செயற்பாடு என்பன அவசியமாகும்.

பெண்களுக்கெதிரான வன்முறையானது ஒரு சில நாட்களில் முடிவுக்கு கொண்டு வரமுடியாது. அதனை அடைவதற்கு நீண்டகாலம் எடுக்கும். சமூகத்தின் சில தரப்பினரின் முயற்சி மட்டும் போதாது. சமூகத்தில் உள்ள ஒவ்வொருவரதும் ஒத்துழைப்பும் வேண்டும். குறைந்தபட்சம் தனது குடும்ப, சமூக மட்டத்திலாவது வன்முறைகள் ஏற்படாமல் தவிர்க்கப்பட வேண்டும். அதனை இன்றே செய்ய தொடங்கி பெண்களுக்கெதிரான வன்முறையினை இப்போதே நிறுத்துவோம்.

**செல்வி. உதயனி நவரத்தினம்**
**பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்,**
**மாவட்டச் செயலகம்,**
**யாழ்ப்பாணம்.**

# தற்போதுள்ள தடுப்பூசிகள் ஒமிக்ரோனிலிருந்து பாதுகாக்கும்

## உலக சுகாதார அமைப்பு

(ஜெனிவா)

**தற்போது பாவனையில் உள்ள கொவிட் தடுப்பூசிகளால் ஒமிக்ரோன் புதிய திரிபு தொற்றுக்கு எதிராகப் பாதுகாப்பளிக்க முடியும் என நம்புவதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.**

ஒமிக்ரோன் தொற்று திரிபால் பாதிக்கப்படுவோர் கடுமையான நோய்வாய்ப்படும் ஆபத்தில் இருந்து தடுப்பூசிகள் பாதுகாக்கும் எனவும் உலக சுகாதார அமைப்பின் அவசரகால திட்ட நிர்வாக பணிப்பாளர் மருத்துவர் மைக் ரியான் தெரிவித்தார்.

டெல்டா மற்றும் பிற திரிபுகளை விட ஒமிக்ரோன் தொற்றுக்குள்ளானோர் அதிக நோய் அறிகுறிகளை ஏற்படுத்தவில்லை என்பதை ஆரம்பகட்ட ஆய்வு முடிவுகள் காட்டுகின்றன எனவும் மைக் ரியான் சுட்டிக்காட்டினார்.


12 பேரின் இரத்தப் பரிசோதனையின் அடிப்படையில், ஒமிக்ரோன் எதிர்பார்த்தது போன்று மோசமானது இல்லை என்பதை அறிந்துகொள்ள முடிந்தது என்று அவர் கூறினார்.

இதேவேளை, ஒமிக்ரோன் திரிபுக்கு எதிராக பைசர் தடுப்பூசி எந்தளவு பாதுகாப்பளிக்கிறது? என்பது தொடர்பில் மேலதிக ஆய்வுகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இது குறித்த மேலதிக தகவல்கள் எதிர்வரும் நாட்களில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையே, மொடர்னா, ஜோன்சன் அன்ட் ஜோன்சன் மற்றும் பிற தடுப்பூசிகள் புதிய ஒமிக்ரோன் திரிபுக்கு எதிராக எவ்வாறு பாதுகாப்பு - செயல்திறனை வெளிப்படுத்துகின்றன? என்பது குறித்த குறிப்பிடத்தக்க தரவு எதுவும் இது வரை வெளியாகவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (4)

# வலி இல்லாமல் உயிரை மாய்க்க புதிய இயந்திரம்



(ஜெனிவா)

சுவிட்சர்லாந்தில் வலி இல்லாமல் தற்கொலை செய்து கொள்ள நவீன இயந்திர பயன்பாட்டிற்கு அந்நாட்டு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

"வைத்தியர் டெத்" என்று அழைக்கப்படும் கருணைக் கொலை ஆர்வலரும் வைத்தியருமான பிலிப் நிட்ச்கே, என்பவர் வலியே இல்லாமல் தற்கொலை செய்து கொள்வதற்கான இயந்திரத்தை கண்டு பிடித்துள்ளார்.

"சார்கோ கப்சூல்" என அழைக்கப்படும் சவப்பெட்டி போன்ற இந்த இயந்திரத்தை எங்கு வேண்டுமானாலும் எடுத்துச் செல்லலாம்.

தற்கொலை செய்து கொள்ள விரும்பும் நபர்கள் இந்த இயந்திரத்தின் உள்ளே சென்று, அதில் உள்ள ஒரு பொத்தானை அழுத்தியதும் ஒரே நிமிடத்தில் உயிர் பிரிந்துவிடும் எனக் கூறப்படுகிறது.

இந்த நிலையில், அடுத்த ஆண்டு முதல் "சார்கோ கப்சூல்" என அழைக்கப்படும் இந்த இயந்திரம் செயற்பாட்டுக்கு வரும் எனக் கூறப்படுகிறது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு தொற்றை கட்டுப்படுத்த அனைவரும் ஒத்துழையுங்கள்

## மன்னார் அரச அதிபர் வேண்டுகோள்



(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் டெங்கு நோயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு அனைத்து தரப்பினரும் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் டெங்குக் கட்டுப்பாடு தொடர்பாக ஆராயும் அவசர கலந்துரையாடல் நேற்று புதன்கிழமை மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

இதன் போது சுகாதாரத் துறையினர் , பொலிஸார் இராணுவம்; பிரதேச செயலாளர்கள், அழைக்கப்பட்ட திணைக்களத் தலைவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

குறித்த கலந்துரையாடலைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

குறித்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக இன்று 9 ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 15 ஆம் திகதி புதன்கிழமை வரை மன்னார் மாவட்டத்தில் டெங்கு ஒழிப்பு வாரம் அமுல்படுத்துகின்றோம்.

பிரதேச செயலகம், உள்ளூராட்சி மன்றங்கள், பாதுகாப்புத் துறை, சுகாதார திணைக்களம் மற்றும் சமூக மட்ட அமைப்புகள் இணைந்து எதிர்வரும் ஒரு வாரத்திற்கு சிரமதானம் மேற்கொள்ளப்படவுள்ளன. அத்துடன் களத்தரிசிப்பும் இடம்பெறும். இதன்போது சகல சமூகமட்ட அமைப்புக்களும் ஒத்துழைப்பினை வழங்க வேண்டும் எனவும் மக்கள் மிகவும் விழிப்புடனும், அவதானத்துடனும் செயற்படுமாறு உரிய திணைக்களங்கள் வழங்குகின்ற ஆலோசனைகளுக்கு அமைவாக கட்டுப்பட்டு ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (5-4-6-285)

# டிப்பர்-மோ.சைக்கிள் விபத்து; கிராம உத்தியோகத்தர் காயம்

(நெளுக்குளம்)

வவுனியா மயிலங்குளம் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் கிராம உத்தியோகத்தர் ஒருவர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

நேற்றுக் காலை இடம்பெற்ற இவ்விபத்து சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில்,

பண்டாரிக்குளம் தனது வீட்டில் இருந்து ஆசிகுளம் குறித்த கிராம உத்தியோகத்தர் நேற்றுக் காலை மோட்டார் சைக்கிளில் கடமைக்குச் சென்ற போது மயிலங்குளம் சந்திக்கு அண்மித்த பகுதியில் கிரவல் ஏற்றிக் கொண்டு வந்த டிப்பர் வாகனத்துடன் மோதி விபத்திற்குள்ளாகியது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த கிராம உத்தியோகத்தர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

விபத்து தொடர்பான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (5-6-299)

# உண்டியல் உடைத்து திருட்டு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஒட்டுசுட்டான் தான் தோன்றீஸ்வரர் ஆலய உண்டியல் நேற்று முன்தினம் இரவு உடைத்து பணம் திருடப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஆலய நிர்வாகம் பொலிஸ் முறைப்பாடு பதிவு செய்த நிலையில் ஒட்டுசுட்டான் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (5-6-281)

# நூல் வெளியீடு

(வவுனியா)

மருத்துவ கலாநிதி திருமதி சரஸ்வதி பிரபாகரனின் நீரிழிவு நோயும் யோகாசனமும் (மருத் துவ நூல்) நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் வவுனியா சுத் தானந்தா இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. தமிழருவி த.சிவகுமாரன் தலைமையில் நடை பெறவுள்ள இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக வவுனியா பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் த.மங்களேஸ்வரன் கலந்து கொள்வார். (5-6)



கிளிநொச்சி பூநகரி சின்னப்பல்லவராயன்கட்டு கிராமத்தில் சிறுவர்கள், பெண்கள் உள நெருக்கடிக்குள்ளாவது தொடர்பான விழிப்புணர்வு செயற்பாடு நேற்று முன்தினம் நடைபெற்றது. இவ்விழிப்புணர்வுச் செயற்பாடு **US AID** நிறுவனத்தினரால் நடத்தப்பட்டது. (படம்: கிருஸ்ணகுமார்)


# பச்சிலைப்பள்ளி பிரதேச சபை- பளை

## இயக்கச்சி சந்தை வளாக கடைகள் நீண்டகால குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல்-2022

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 09.12.2021 தொடக்கம் 23.12.2021 பிற்பகல் 2.00 மணிவரை (அலுவலக நேரம்)
கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசி திகதி :- 23.12.2021 பிற்பகல் 2.00 மணி
கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி :- 23.12.2021 பிற்பகல் 2.00 மணி
கேள்வி திறக்கப்படும் இடம் :- பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, தலைமை அலுவலகம்

| இல. | கடை இல. | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்விப்படிவ கட்டணம் |
|---|---|---|---|---|
| 01 | VS – 04 | 75,000.00 | 7,500.00 | 2,000.00 |
| 02 | PS – 04 | 150,000.00 | 15,000.00 | 2,000.00 |
| 03 | PS – 06 | 120,000.00 | 12,000.00 | 2,000.00 |
| 04 | PS – 07 | 120,000.00 | 12,000.00 | 2,000.00 |
| 05 | PS – 08 | 105,000.00 | 10,500.00 | 2,000.00 |
| 06 | PS – 10 | 105,000.00 | 10,500.00 | 2,000.00 |
| 07 | PS – 11 | 96,000.00 | 9,600.00 | 2,000.00 |
| 08 | PS – 12 | 96,000.00 | 9,600.00 | 2,000.00 |
| 09 | PS - 13 | 96,000.00 | 9,600.00 | 2,000.00 |
| 10 | PS - 14 | 96,000.00 | 9,600.00 | 2,000.00 |

**நிபந்தனைகள்**

01. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
02. கேள்விப்படிவம் பெறவிரும்புவோர் கோரிக்கைக் கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ. அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் அதன் பிரதியுடன் சமுகமளிக்க வேண்டும்.
03. கேள்விப்படிவம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை **"தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை"** என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாக இட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி"** என்ற முகவரிக்கு 23.12.2021 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.
04. ஒருவர் ஒரு கடைக்கு மாத்திரம் விண்ணப்பிக்கமுடியும்.
05. மாதாந்த கடை வாடகையாக பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையினை செலுத்தவேண்டும். குறித்த மாத வாடகைப் பணத்தினை அடுத்தமாதம் 05 ஆம் திகதிக்குள் செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ள வேண்டும். தவறும் பட்சத்தில் அதற்கான மாதக் கட்டணத்துடன் மாதாந்தக் கட்டணத்தின் 10% தண்டமாக அறவிடப்படும் என்பதையும் கவனத்தில் கொள்ளவும். டிசெம்பர் மாதத்திற்குரிய வாடகை பணத்தினை டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்த வேண்டும்.
06. கேள்வி சித்திதாரராக தெரிவு செய்யப்படுவோர் கேள்வித்தொகையினைமுழுமையாகச் செலுத்திப் பற்றுச்சீட்டினை பெற்றுக்கொண்டு பிரதேச சபையுடன் ஒப்பந்தத்தினை செய்துகொள்ளவேண்டும்.
07. சித்திகர குத்தகைதாரர் பச்சிலைப்பளளி பிரதேச சபையுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைக்கிணங்க நடந்து கொள்ளல் வேண்டும்.
08. சித்திகர குத்தகைதாரர் பாதுகாப்பு வைப்புப்பணமாக 03 மாதகால வாடகைத் தொகையினை முற்பணமாகச் செலுத்த வேண்டும்.
09. VS-04 கடை மரக்கறி மற்றும் பழ வியாபாரத்திற்கு மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது.
10. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார உரிமக் கட்டணத்தினை வருடாந்தம் செலுத்தி வியாபார உரிமத்தினை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
11. கேள்விப் பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் தவிசாளர்/செயலாளருக்கு உண்டு.
12. மேலதிக விபரங்களை பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

**சுப்பிரமணியம் சுரேன்**
**தவிசாளர்,**
**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை,**
**பளை.**

(C-3199) **09.12.2021**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சா எண்ணெய் இறக்குமதி தொடர்ந்து முன்னெடுக்கப்படும்

## எரிசக்தி அமைச்சர்



(கொழும்பு)

கச்சா எண்ணெயை இறக்குமதி செய்வதற்கு தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் என எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

26 நாட்களுக்கு தேவையான கச்சா எண்ணெய் ஏற்கனவே சேமித்து வைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

தற்காலிகமாக மூடப்பட்டிருந்த சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் செயற்பாடுகளை மீள ஆரம்பிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அமைச்சர் உதய கம்மன்பில இதனைத் தெரிவித்தார்.

மேலும், 7 இலட்சம் பீப்பாய்கள் கச்சா எண்ணெயை இறக்குமதி செய்ய 59 மில்லியன் டொலர்கள் செலவிட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். (4)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்

### விரதங்கள்

## செல்வம் தரும் லட்சுமி குபேர வழிபாடு



கோரிக்கைகளை நிறைவேற்றவும், செல்வம், சந்தோசம் ஆரோக்கியத்தைத் தரும்படி குபேரனை வேண்டிக் கொள்ள வேண்டும். இந்த பூஜையை எப்போது வேண்டுமானாலும் ஆண், பெண், குழந்தைகள் யார் வேண்டுமானாலும் கடைப் பிடிக்கலாம்.

அட்சய திதியன்று லட்சுமி குபேரரை வழிபட்டால் நீங்காத செல்வம் நிலைத்து இருக்கும். ஐஸ்வரிய கோலம் போட்டு பூஜை செய்வது நல்லது. இந்த கோ பூஜை மூலம் அனைத்து செல்வங்களும் உள்ள உன்னதமான வாழ்வு அமையும்.

ஓம் யக்ஷராஜ வித்மஹே
வைச்ரவணாய தீமஹி
தந்நோ குபேர; ப்ரசோதயாத்.

இந்த மந்திரத்தை உச்சரித்தால் செல்வங்கள் நிலைத்து நிற்கும்.

**பூஜை செய்ய ஏற்ற நாள்**

லட்சுமி குபேர பூஜை செய்ய தீபாவளி திருநாள் உகந்தது. மேலும் சித்திரை, வைகாசி, ஆனி, ஆவணி, கார்த்திகை மாதங்களில் பூரட்டாதி நட்சத்திரம் வரும் நாளில் பூஜை செய்வது மிகுந்த பலன்களைத் தரும். ஒவ்வொரு வாரமும் வியாழக் கிழமை மாலை 5 மணி முதல் இரவு 8 மணி வரை குபேர காலமாகும். இந்த நேரத்தில் கடன் தொல்லை, வியா பாரத்தில் நஷ்டமடைந்தோர் 5 வியாழன் மாலை, குபேர தீபம் ஏற்றி லட்சுமி குபேர நாமம் செய்தால் பலன் கிடைக்கும்.

**குபேர எந்திர பூஜை**

இந்த பூஜை சிறப்பு மிக்கது. குபேரன் தனது செல்வம் அனைத்தையும் இழந்து நின்ற போது லட்சுமி தேவியை வணங்கி எந்திரத்தைப் பெற்றான். அந்த எளிய குபேர பூஜையை விரதம் இருந்து செய்ய நலம் விளையும். இதை செய்வதால் கடன்கள் தீரும். செல்வம் பெருகும். ஆண்டுக்கு 2 முறை செய்தால் பணத் தட்டுப்பாடு இருக்காது.

குபேர எந்திர பூஜையை மேற்கொள்ளும் போது ஒரே மாதிரியான நாணயங்களை எடுத்து வைத்து கொள்ள வேண்டும். பூஜை அறையில் கோலம் போட வேண்டும் எண்களை வெள்ளை அரிசி மாவினாலும், கட்டங்களை சிவப்பு குங்குமத்தினாலும், வார்த்தைகளை மஞ்சள் பொடியினாலும் போட வேண்டும். ஒவ்வொரு கட்டத்துக்கும் நாம் ஏற்கனவே சேர்த்து வைத்துள்ள நாணயத்தை வைத்து தொடர்ந்து 9 வெள்ளிக்கிழமைகள் அல்லது 9 பௌர்ணமி என பூஜிக்க வேண்டும். அதே தினங்களில் 9 நாட்கள் தொடர்ந்து பூஜை செய்ய வேண்டும். அந்த எண்களின் பக்கத்தில் எழுத்துகள் அழியாமல் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். அந்த [illegible] வைக்க வேண்டும். (தொடரும்)

# செய்தித்துளிகள்

## காட்டு யானை தாக்கி இருவர் பலி

(கொழும்பு)

அம்பாந்தோட்டை சூரியவெவ பகுதியில் காட்டு யானை தாக்கியதில் இருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இந்த சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர்கள் சூரியவெவ மீகஹஜந்துர பகுதியில் வசிக்கும் 39 மற்றும் 43 வயதுடையவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். சூரியவெவ பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4)

## கணவனை கத்தியால் குத்தி படுகொலை செய்த மனைவி

(கொழும்பு)

நவகமுவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ரணால பகுதியிலுள்ள் வீடொன்றில் கணவன்-மனைவிக்கிடையில் ஏற்பட்ட தகராறில் கணவன் கத்திக்குத்துக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் மாலை பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்தவர் மொரகெட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 50 வயதான ஒருவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

நவகமுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4)

## ஆற்றிலிருந்து பெண்ணின் சடலம் மீட்பு

(நுவரெலியா)

நுவரெலியா- ருவான் எலியா, பிளாக்பூல் ஆற்றில் விழுந்து உயிரிழந்த பெண்ணொருவரின் சடலம் நேற்றுக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

நுவரெலியா-ருவான் எலியா, பன்சல வீதியைச் சேர்ந்த 78 வயதுடைய புஞ்சிபண்டாரகே மெனிகாமி என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். சடலம் சட்ட மருத்துவ பரிசோதனைக்காக நுவரெலியா ஆதார மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளதுடன், நுவரெலியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 320 | 350 |
| உருளைக்கிழங்கு | 150 | 150 | 160 |
| பச்சைமிளகாய் | 500 | 500 | 500 |
| தக்காளி | 480 | 500 | 500 |
| மரவள்ளிக்கிழங்கு | 600 | 60 | 50 |
| கோவா | 350 | 400 | 400 |
| கரட் | 340 | 360 | 400 |
| பூசணி | 60 | 60 | 60 |
| புடோல் | 300 | 250 | 300 |
| வாழைக்காய் | 50 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 180 | 160-200 | 200 |
| பெரிய வெங்காயம் | 150 | 150 | 160 |
| பாகற்காய் | 500 | 500 | 800 |
| வெண்டிக்காய் | 200 | 360 | 300 |
| கருணைக் கிழங்கு | 120 | 130 | 150 |
| பயற்றங்காய் | 550 | 450 | 350 |
| லீக்ஸ் | 340 | 360 | 400 |
| பீற்றூட் | 200 | 200 | 250 |
| கறிமிளகாய் | 500 | 200 | 500 |
| முருங்கைக்காய் | 700 | -- | 800 |
| போஞ்சி | 400 | 360 | 400 |
| கத்தரிதம்புள்ள | 250 | -- | 300 |
| கீரை - 1 பிடி | 120 | -- | 120 |
| தேசிக்காய் | 300 | 300 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 70 | 60-90 |
| இராசவள்ளி | 250 | 200 | 220 |
| வெங்காயப்பூ | 550 | -- | -- |
| முள்ளங்கி | 140 | -- | 250 |
| பொன்னாங்காணி | 80 | 70 | 50 |
| வல்லாரை | 250 | 20 | 40 |
| ஈரப்பலா | 130 | 100 | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசிபலன்

**09.12.2021**
**கார்த்திகை 23, வியாழக்கிழமை**
**சஷ்டி பின்னிரவு 2.21 மணிவரை**
**அவிட்டம் பின்னிரவு 4.11 மணிவரை**
**சுபநேரம் 7.48-9.18 மணிவரை**
**இராகுகாலம் 1.48-3.18 மணிவரை**
**சந்திராஷ்டமம்: புனர்பூசம்**
**விநாயகர் சஷ்டி விரதம்.**

**வளவன்**


மேஷம்

வீட்டை சீரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், புத்தி சாதுர்யமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.


ரிஷபம்

வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், புதிய முயற்சிகள் கைகூடும்.


மிதுனம்

உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், வழிபாட்டால் சுகம் காண வேண்டிய நாள், தொழில் வளர்ச்சியில் சிறு சிறு தடைகள் ஏற்படலாம்.


கடகம்

புதிய பொருட் சேர்க்கையுண்டு, சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம்.


சிம்மம்

நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும், கடன் சுமை குறைய புதிய வழி பிறக்கும், குடும்பத்தில் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், காரிய அனுகூலமுண்டு.


கன்னி

இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, பொது நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, இனிமையான நாள்.


துலாம்

அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், சுப செய்திகள் வந்து சேரலாம்.


விருச்சிகம்

பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், பக்குவமாய்ப் பேசி காரியம் சாதிப்பீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், போசன சுகமுண்டு.


தனுசு

குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.


மகரம்

ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், மன அமைதி கூட மகத்தான வழிபாடுகளை மேற்கொள்ள வேண்டிய நாள், வியாபார நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.


கும்பம்

தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், தேவையற்ற சஞ்சலங்களைத் தவிர்ப்பது நல்லது, குடும்ப பெரியவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது.


மீனம்

பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் கூடும் பிரிய மானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், செல்வாக்கு மேலோங்கும் நாள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

கடமை பெரிது அதைவிடப் பெரிது கண்ணியம்

# நிர்வாகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

தீவகம் வேலணை பெருங்குளம் அருள்மிகு முத்துமாரி அம்மன் ஆலயத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆலய மண்டபத்தில் நடைபெற்றது.

2021-2022 நடப்பாண்டுக்காக புதிதாக தெரிவான அறங்காவலர் சபையின் நிர்வாகத்தின் தலைவராக க.கந்தசாமியும் செயலாளராக மு.வரதராசாவும் பொருளாளராக ஐ.ரதீஸ்வரனும் உப தலைவராக பொ.நடனசிகாமணியும் உபசெயலாளராக மு.சிவராசாவும் தெரிவு செய்யப்பட்டனர். (5-6)

# விண்ணவரோடு மகிழ்ந்த 90ம் நாள்



| மண்ணுலகில் | விண்ணுலகில் |
|---|---|
| 09.08.1951 | 09.09.2021 |

**Late.Mrs.Daisy Fatima Manoharan**
(B.com - J.P)
(Rtd. Teacher Wesley College-Colombo-09)
(Old girl Holy Family Convent-Jaffna)

உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான் (யோவான் 11.25)

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிராத்திக்கின்றோம்.

தலைவர்/ செயலாளர்/ அங்கத்தவர்கள்
யாழ்.ஏழாலை வடக்கு அருள்மேரி சமூக அபிவிருத்தி மன்றம்.

133, Mathavaddy
Eralalai North Eralalai
Jaffna.
021 224 3894

(8980)

# கண்ணீர் அஞ்சலி

## திருமதி.சோமசுந்தரம் நித்தியலட்சுமி

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 03.03.1932 | 26.11.2021 |



வைத்தீஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவியும் எமது கல்லூரியில் நீண்டகாலமாக இலிகிதராக கடமை புரிந்த திரு.சோமசுந்தரம் அவர்களின் பாரியாரும் எமது கல்லூரியில் உயர்தர வகுப்பு கணக்கியல் பாட ஆசிரியையாகவும் தற்போது கனடா பழைய மாணவர் சங்க செயலாளராகவும் கல்லூரியின் பௌதீக மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளுடன் கல்வித்தரத்தையும் மேம்படுத்துவதற்கு அரும்பாடுபட்டு வருவதுடன் உலகெங்கிலுமுள்ள எமது கல்லூரியின் பழைய மாணவர்களை ஒன்றுசேர்ப்பதிலும் கல்லூரிக்கு தேவையானவற்றை முன்னிலைப்படுத்தி தன்னார்வத் தொண்டுகளை மனப்பூர்வமாக செய்வதிலும் மிகவும் ஈடுபாடு கொண்ட எமது ஆசான் திருமதி.ஸ்ரீரங்கநாயகி ஸ்ரீசற்குருநாதன் அவர்களின் தாயார் இறைபதமெய்திய செய்தியறிந்து பெருந்துயரடைகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும் அவர்தம் குடும்பத்திற்கும் எம்முடன் ஒன்றாகப் படித்து எமது கல்லூரிக்கு பல நன்கொடைகளை வழங்கி எமது உறவுகளை வளர்த்துக் கொண்ட அன்னாரது மகன்களுக்கும் மகள்களுக்கும் மற்றும் அவர்தம் குடும்ப உறவுகளுக்கும் எமது ஆழ்ந்த இரங்கல்களையும் ஆறுதல்களையும் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா இறையடி சேர வண்ணை வைத்தீஸ்வரப் பெருமானை பழைய மாணவர் சங்க தாய்ச்சங்கம் மற்றும் ஏனைய சங்கங்கள் சார்பாக வேண்டிக்கொள்கின்றோம்.

தாய்ச்சங்கம்,
பழைய மாணவர் மன்றம்,
வைத்தீஸ்வராக் கல்லூரி.

(8978)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் அரங்கம்

## குரங்கின் காற்றாடி



அன்று ஞாயிற்றுக் கிழமை. பள்ளி விடுமுறை என்றாலே குட்டிக் குரங்கு முத்து விற்கும், பாலுவிற்கும் கொண்டாட்டம்தான்.

அப்பா எவ்வளவு சொல்லியும், துணிப்பையைக் கொண்டு செல்லாமல், நெகிழி உறைகளில் காய்கறிகளை வாங்கி வருவார் முத்துவின் அம்மா.

அந்த நெகிழி உறைகள்தான் முத்துவிற்கும் பாலுவிற்கும் ஞாயிற்றுக்கிழமைகளில் பொழுதைப் போக்கும்.

ஆம், அந்த நெகிழிப் பைகளை வயதான கரடி மாமாவிடம் கொடுத்து காற்றாடி செய்து வானில் பறக்கவிடுவதில் இருவருக்கும் பெரு மகிழ்ச்சி.

அப்பா குரங்கு நெகிழியால் (பிளாஸ்டிக்) எவ்வளவு தீமை என்று கூறியும், அதைக் காதில் வாங்காது, நாள்தோறும் வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கி வரும் உறைகளை அப்படியே குப்பைத் தொட்டியில் எறிவதையே வழக்கமாகக் கொண்டிருந்தார் முத்துவின் அம்மா.

வாங்கி வருகிற பெரிய உறைகளை எடுத்து காற்றாடி விட்டுக் கொண்டிருந்தான் முத்து. எவ்வளவு சொல்லி·யும் மனைவியும், மகனும் மனம் திருந்தாதது கண்டு மிகவும் வருந்தினார் முத்துவின் அப்பா.

எப்பப் பார்த்தாலும் அப்பாவுக்குக் குறை சொல்றதே வேலையாகப் போய் விட்டது என முத்துவும் பாலுவும் அப்பாவின் வருத்தத்தைப் புரிந்து கொள்ளாமல் பள்ளி விடுமுறை நாட்களில் காற்றாடி விடுவதைக் கடமையாக்கிக் கொண்டனர்.

ஒரு ஞாயிற்றுக்கிழமை வெளியூரில் வேலை முடித்து தனது ஊருக்கு, மோட்டார் வண்டியில் வந்து கொண்டிருந்தது ஓர் இளங்கரடி. உயரமான குன்றின் மீது பல குட்டிக் குரங்குகளுடன் காற்றாடி பறக்கவிட்டு உற்சாகமாக சத்தம் போட்டுக் கொண்டிருந்தனர் முத்துவும் பாலுவும்.

முத்துவின் காற்றாடிக்கு பாலு தன் காற்றாடி மூலம் விளையாட்டுக்காட்டிக் கொண்டிருந்தான். ஒருவரை ஒருவர் வெற்றி பெறுவதற்கான விளையாட்டு அது. அதற்காக அவர்கள் அந்நூலில் வஞ்சிர கோந்து, கண்ணாடிச் சில்லு தூள்கள், பற்றரி கரி என பலவற்றைச் சேர்த்து, கத்தி போன்று கடினமாக்கி வைத்திருந்தனர். எதிர்பாராத விதமாக முத்துவின் காற்றாடி அறுந்தது.

காற்றில் அசைந்து அசைந்து காற்றாடி நூல் வண்டியில் வந்து கொண்டிருந்த இளங் கரடியின் கழுத்தை அறுத்து விட்டது. ஐயோ! என்று அலறியது இளங்கரடி. ரத்தம் வேகமாக வெளியேறியது. அருகில் இருந்தவர்களின் உதவியோடு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டது கரடி. பயத்தில் செய்வதறியாது திகைத்துக் கொண்டிருந்தனர் பாலுவும் முத்துவும். அவர்களின் உடல் நடுங்கிக்கொண்டிருந்தது.

மறுநாள்·செய்தித்தாளில் காற்றாடி நூலால் இளங்கரடி கழுத்து அறுபட்ட செய்தியும், அதற்குக் காரணமான முத்து, பாலுவின் படங்களும் வெளியாகியிருந்தன.

தமது தவறை உணர்ந்த குட்டிக் குரங்குகள் பொலிஸ் நிலையத்தில் தலைகவிழ்ந்து நின்றனர். தந்தையும் தாயும் வந்து காவலரிடம் மன்னிப்புக் கேட்டனர். இனி, பெற்றோரின் பேச்சை மீறுவதில்லை, பூமிக்கும் தீங்கு விளைவிப்பது இல்லை என்றும் வாக்களித்தனர்.

நானும், இனி கடைகளுக்குச்செல்லும்போது துணிப் பைகளையே கொண்டு செல்வேன் என முத்துவின் தாயார் கூறினார். அட! இது தான் குடும்பத்தோடு தமிழ்ப் புத்தாண்டு சபதமா? என்று கேட்டார் காவலர் சிரித்தபடியே ஆமாம்... ஆமாம்... என்றனர் அனைவரும் சிரித்தபடியே.

# மகாபாரதம்




தவவலிமை மிக்க பலரை நான் அறிவேன். வாதாபியை அடக்கிய அகத்தியர் முதலியவர்களை நான் போற்றுகின்றேன். உமது சினத்தை நீர் அடக்குவீராக.

என்னைப் பொறுத்தவரை கணவரை விட உயரானவர் யாருமில்லை. அதனால் ஏற்படும் பயனும் நான் அறிவேன். நீர்சினம்கொண்டு கொக்கை எரித்ததை எனது பதிவிரதத் தன்மையால் அறிந்தேன்.

நீர் சினத்தால் அக் கொக்கை எரித்தது போல என்னை ஒன்றும் செய்யமுடியாது" என்றாள்.

மேலும் கூறத் தொடங்கினாள் அந்தப் பத்தினி, "அந்தணர் என்பவர் யார் தெரியுமா? கோபத்தை விடுபவர் அந்தணர். பிறரால் துன்புறுத்தப்பட்டாலும்அப் பிறர்க்குத் துன்பம் செய்யாதவரே அந்தணர்.

யார் ஆகமப் பயிற்சியுள்ளவரோ அவரே அந்தணர். யார் இன்ப துன்பங்களைச் சமமாகக் கருதுகின்றனரோ அவரே அந்தணர். "யான்" எனும் செருக்கு அற்றவர் யாரோ அவரே அந்தணர்.

தருமத்தை அறிதல் எளிதன்று. நீர் தருமத்தை நன்கு அறிதல் வேண்டும். மிதிலையில் தரும வியாதர் என்றொருவர் இருக்கிறார். அவரிடம் சென்று தருமம் பற்றி உணர்வீர்களாக. நன்மை தீமை உணர்ந்த யாரும் பெண்களைப் பழிக்கவோ துன்புறுத்தவோ மாட்டார்கள்" என்றாள்.

இதைக்கேட்ட கௌசிகன் வியப்புற்றான். "என்னிடம் இருந்த கோபம் விலகியது. மிதிலை சென்று தரும வியாசரிடம் தருமங்கள் பற்றி அறிய விரும்புகிறேன்" என்று சொல்லிவிட்டு கௌசிகன் மிதிலைக்குப் புறப்பட்டான்.

வீட்டிலிருக்கும்போதே கொக்கு எரிக்கப்பட்டதை உணர்ந்து பேசியவளின் பேச்சுகளை எண்ணி வியந்தான். தருமவியாதரிடம் மேலும் தருமங்களை அறிய மிதிலையை நோக்கி விரைந்தான்.

அறத்தின் பொலிவுடன் இருந்தது அந் நாடு. உணவு தானியங்கள் நிறைந்திருந்தன. மக்கள் நிம்மதியுடன் இருந்தனர். கௌசிகன் தருமவியாதர் இருக்குமிடம் சென்றான்.

அப்போது விலங்குகளைக் கொல்லும் இடத்தில், மாட்டிறைச்சியையும், மானிறைச்சியையும் விற்பனை செய்து கொண்டிருந்தார், தருமவியாதர். சனநெருக்கடியாய் இருந்ததால் கௌசிகன் தனியான ஓரிடத்தில் அமர்ந்தான்.

தருமவியாதர், அவனிடம் சென்று, "உம்மை ஒரு பதிவிரதை மிதிலைக்குப் போகுமாறு பணித்ததை நான் அறிவேன். உனக்கு வேண்டியது யாது? என்றார்.

கௌசிகனுக்கு இது இரண்டாவது வியப்பு, "இவ்விடத்தில் நீர் இருப்பது தவறு. என் வீட்டிற்குப் போகலாம்" என தருமவியாதர் அழைக்க கௌசிகன் மகிழ்ந்தான். தருமவியாதர் தன் வீட்டில் கௌசிகனுக்கு தக்க உபசாரம் செய்தார். கௌசிகனும் மகிழ்ந்து "தருமவியாதரே.. நீர் செய்யும் தொழில் உமக்கு ஏற்றதன்று" என்றான்.

"என் மூதாதையர் காலத்திலிருந்தே இத்தொழிலை என் குடும்பம் செய்து வருகிறது. என் பெற்றோரைக் காப்பது ஒன்றே என் கடமையாய் செய்து வருகிறேன். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்ந்தவர் என்பவர் மகிழ்ச்சி, செருக்கு, சினம், மிகுந்த கூச்சம், பிடிவாதம் வறட்டுத்தனமான சுயகௌரவம் இவைகளுக்கு இடங்கொடுக்க மாட்டார். – கிருபானந்த வாரியார்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இன்றைய அவலநிலைக்கு ரணில் விக்கிரமசிங்கவே காரணம்

நாங்கள் ஆட்சியில் இருந்தபோது நாட்டின் பொருளாதாரத்தையும் மீட்டு, வீட்டுப் பொருளாதாரத்தையும் காப்பாற்றினோம் என்று பாராளுமன்றத்தில் மார்தட்டியுள்ளார் முன்னாள் பிரதமரும் பாராளுமன்ற உறுப்பினரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க.

பாராளுமன்றத்தில் ரணில் விக்கிரமசிங்க ஆற்றிய உரையில் ஏதேனும் யதார்த்தம் இருக்கின்றதா? என்றால் அறவே இல்லை என்பதுதான் அதற்கான பதிலாக இருக்கும்.

உண்மையில் இன்றைய மிக மோசமான நிலைமைக்கு மூலகாரணம் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க என்பதைக் கூறித்தானாக வேண்டும்.

ஆம், நல்லாட்சியில் பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க; அன்றைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் சேர்ந்து பயணித்திருந்தால், தொடர்ந்தும் நல்லாட்சி அரசாட்சி செய்திருக்க முடியும்.

ஆனால் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்தபோது; அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் சேர்ந்து பயணிக்க மறுத்தார்.

இதனால் பொறுமை இழந்த மைத்திரிபால சிறிசேன மகிந்த ராஜபக்ஷவைப் பிரதமராக்கி இலங்கையின் அரசியல் வரலாற்றில் மிகப் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தினார்.

மகிந்த ராஜபக்ஷவை எதிர்த்து ஜனாதி பதித் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற மைத்திரிபால சிறிசேன, ராஜபக்ஷ தரப்பை கடுமையாக விமர்சித்திருந்தார்.

அதேநேரம் ரணில் விக்கிரமசிங்கவுடன் சேர்ந்து பயணிப்பதில் நேர்மையுடன் செயற்பட்டார்.

ஆனால் ரணில் விக்கிரமசிங்க எதிலும் நரித்தந்திரத்துடன் செயற்பட, நல்லாட்சி கந்தறுந்து போனது.

தவிர, கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதி வேட்பாளராக அறிவிப்பதில் ரணில் விக்கிரமசிங்க காட்டிய அசமந்தம் சஜித் பிரேமதாஸவின் வெற்றியை தடுத்ததுடன் அதன் விளைவாக ஐக்கிய மக்கள் சக்தி என்ற புதிய அரசியல் கட்சியின் பிரசவத்துக்கும் வழிவகுத்தது.

இவ்வாறு அரசியலில் நேர்மையீனமாக நடந்த ரணில் விக்கிரமசிங்க, கடந்த பொதுத் தேர்தலில் படுதோல்வி கண்டார் என்பதோடு அவர் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி எந்தவொரு இடத்திலும் வெற்றி பெற முடியாமல் போயிற்று.

ஆக, ஒரே ஒரு நியமன எம்.பி ஆசனம் மட்டுமே ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கிடைக்க அதனை ரணில் தனதாக்கிக் கொண்டார்.

இவ்வாறு அரசியல் புலத்தில் ஒட்டுமொத்தத் தோல்வியைச் சந்தித்த ரணில் விக்கிரமசிங்க, நாட்டை மீட்டோம். வீட்டைக் காப்பாற்றினோம் ஏன்று மார்தட்டுவதெல்லாம் அர்ப்பத்தனமானது; அர்த்தமற்றது.

உண்மையைக் கூறப்போனால், நல்லாட்சி கந்தறுந்து போனதற்கும் ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸ தோல்வியைச் சந்திப்பதற்கும் கூட்டமைப்பைத் தன்வசப்படுத்தி தமிழ் மக்களுக்கு எந்தத் தீர்வும் கிடைக்காமல் செய்ததற்கும் ஒட்டுமொத்தத்தில் இலங்கையின் இன்றைய் அவலநிலை ஏற்படுவதற்கும் ரணில் விக்கிரமசிங்கவே மூல காரணம் என்பது நிராகரிக்க முடியாத உண்மை.

# சமையல் எரிவாயு சம்பந்தமான பிரச்சினைக்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்

## பாராளுமன்றில் அனுரகுமார திஸாநாயக்க

(கொழும்பு)

எரிவாயு சிலிண்டர்களில் இடம்பெற்ற இரசாயன கலவையின் அளவில் இடம்பெற்ற மாற்றமே சிலிண்டர்கள் தீப்பற்றக் காரணம் என்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

அதனால் பூதாகாரமாகியுள்ள சமையல் எரிவாயு சம்பந்தமான பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக்கொடுக்க அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற கைத்தொழில் அமைச்சு, வர்த்தக அமைச்சு மற்றும் இராஜாங்க அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீட்டு குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும் எரிவாயு சிலிண்டர் பிரச்சினைக்கு தீர்வாக நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையானது நிறுவனங்கள் மற்றும் வீட்டுப் பாவனைக்காக கொள்வனவு செய்யப்பட்டுள்ள எரிவாயு சிலிண்டர்களை மீள பெற்றுக் கொள்வதாக அறிவித்துள்ளது.

ஆயினும் அந்த எரிவாயு சிலிண்டர் திறக்கப்படாமல் இருப்பது அவசியம் என கேட்டுக் கொண்டுள்ளது. அது எந்த வகையிலும் சாத்தியமாகாது.

ஏனெனில் எரிவாயு சிலிண்டர்கள் வீட்டுக்கோ அல்லது நிறுவனங்களுக்கோ உபயோகத்திற்காக எடுத்துச் செல்பவர்கள் அதனை உடனடியாகவே பாவனைக்கு எடுத்திருப்பார்கள் என்பதை நுகர்வோர் அதிகார சபை புரிந்து கொள்ள வேண்டும்.

அதனால் திறக்கப்பட்டிருக்கும் சிலிண்டர்களையும் மீள பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும். அவ்வாறு சிலிண்டர்கள் பாவிக்கப்பட்டிருந்தால், அந்த சிலிண்டர்களின் பாரத்தை நிறுத்துப் பார்த்து, அதற்கான செலவை கழித்து, சிலிண்டர்களை மீள பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றார். (ம)

# யாழில் விபத்து ஒருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - சிவலிங்கப்புளியடி சந்தியில் இடம்பெற்ற விபத்தில் இளைஞன் ஒருவன் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கட்டுள்ளார்.

யாழ்ப்பாணம்பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட காங்கேசன்துறை வீதி சிவலிங்கப்புளியடி சந்தியில் மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கரவண்டி என்பன ஒன்றன்பின் ஒன்று மோதியதிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த கிளிநொச்சியைச் சேர்ந்த இளைஞன் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள பொலிஸார் முச்சக்கரவண்டி சாரதி கைது செய்யப்பட்டுள்ளதாக மேலும் தெரிவித்துள்ளனர்.

குறித்த விபத்தின் போது மோட்டார் சைக்கிள் மோதியதில் அருகில் இருந்த வர்த்தக நிலையங்கள் சேதமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-33)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**வவுனியா பிரதேசத்தில்** குருக்கள் புதுக்குளம்- மணியர்கும் ஆகிய பிரதேசங்களில் மின்சாரம் தடைப்படும்.

# வவுனியாவில் மரக்கடத்தல் பொலிஸாரால் ஒருவர் கைது

(வவுனியா)

சட்டவிரோதமான முறையில் காட்டினை அழித்து முதிரை மரக்குற்றிகளை கடத்திய ஒருவரை கைது செய்துள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில்,

வவுனியா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நீலியாமோட்டை பகுதியில் முதிரை மரக்குற்றிகள் வெட்டப்படுவதாக கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய குறித்த பகுதியில் நேற்று சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிஸார் சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணையில் குறித்த காட்டுப் பகுதியில் தொடர்ச்சியாக மரக்கடத்தல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றமை தெரியவந்துள்ளதுடன் சுமார் இரண்டு ஏக்கர் அளவிலான காட்டுப்பகுதியில் இருந்த முதிரை மரங்கள் மற்றும் பெறுமதியான மரங்கள் வெட்டிக் கடத்தப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. (ம-299)

# சத்திய தரிசனம்



## நாடும் உலகமும் நன்மை பெறட்டும்

- பாரததேசம் என்பது ஒரு தனியான நாட்டை மட்டும் குறிப்பிடுவது அல்ல. உலகம் முழுவதும் உள்ள மக்களுக்கு தூய்மையான ஜீவ பிரும்ம தத்துவத்தை போதிக்கக்கூடிய அமைதி நிறைந்த இடம். சரஸ்வதி, பகவதி, பாரதி என்றெல்லாம் கூறுகிறோம். சரஸ்வதி வாக்கிற்கு சக்தி கொடுக்கும் தேவதை. ஆகவே, வாக்கின் சக்தியால் நல்ல பணியை செய்பவர்கள் எங்கிருந்தாலும் அவர்கள் பாரதத்தின் மக்களே. இந்த பண்பு மனித குலத்திற்கே பொருந்தக் கூடியதாகும்.
- ஆன்மிக, அரசியல் மற்றும் இலக்கிய துறைகளிலும் மேன்மை பெற்ற நாடு இது. ஒவ்வொரு உள்ளமும் நல்ல எண்ணங்களைக் கொண்டால், நல்ல விளைவுகள் ஏற்படும். அப்போது உலகம் முழுவதுமே நன்மை ஏற்படும். இதுவே உண்மையான பாரதத்தின் உயரிய தொண்டு.
- நான் உங்களை வேறொன்றும் கேட்கவில்லை. பிரேமையை வளர்த்துக் கொள்ளுங்கள். மனிதன் ஒவ்வொரு உயிரையும் கடவுளின் குழந்தை என்று கருதவேண்டும். வெறுப்பை விட்டொழித்து யாருக்கும் தீங்கிழைக்காத நல்லுணர்வை வளர்த்துக் கொள்ள வேண்டும். எனக்கு கவலை என்பதே கிடையாது. துயரமும் இல்லை. எல்லாமே நிலையற்றவை என நான் கருதுகிறேன். எதுவும் நம்முடையவை அல்ல என்பதை புரிந்துகொள்ள வேண்டும். வரும்போது கொண்டுவரவில்லை. போகும்போது விலாசமும் கொடுப்பதில்லை. பிறகு இவற்றைப்பற்றிய கவலையை மட்டும் சுமப்பானேன்?
- ...யுடன், தளராத நம்பிக்கையுடன், வேறுபாட்டு உணர்வை நீக்கி, ...ளே என்று உணர்ந்து வாழுங்கள். உங்கள் வாழ்க்கை புனிதமாகும். நாடும் உலகமும் நன்மை பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருத்துவ பீட மாணவன் மரணம்

# முன்கூட்டியே தகவல் வெளியானமை தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குக

### யாழ்.நீதிமன்ற நீதவான் உத்தரவு

(கரணவாய்)

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவன் மரணம் தொடர்பில் முன்கூட்டியே தகவல் வெளியானமை தொடர்பில் அறிக்கை சமர்பிக்குமாறு யாழ்.நீதிமன்ற நீதவான் பீட்டர் போல் கோப்பாய் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவனான சி.இளங்குன்றன் கடந்த வருடம் மர்மமான முறையில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

இது தொடர்பான வழக்கு விசாரணை யாழ். நீதிமன்ற நீதவான் பீட்டர் போல் முன்னிலையில் கடந்த 13.10.2020 அன்று வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது சிரேஷ்ட சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா மரணமடைந்த மாணவன் சார்பில் மன்றில் ஆஜராகி யிருந்தார்.

இதன்போது முன்கூட்டியே தகவல் வெளியானமை தொடர்பில் சந்தேகம் இருப்பதாகவும் ஒரு புலன் விசாரணையினை மேற்கொள்ளுமாறு மன்றில் கோரினார். இந்நிலையில் மீண்டும் விசாரணை நேற்று புதன்கிழமை எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையில் முன்கூட்டியே தகவல் வெளியானமை தொடர்பிலான அறிக்கையை மன்றுக்கு சமர்ப்பிக்குமாறும் நீதவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (4-5-60)


# யாழ்ப்பாணம் மாநகர சபை

**சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள், சிற்றுண்டிச்சாலைகள், பல்பொருள் வாணிபக் கடைகள் (நாவாந்துறை) ஒலிபரப்புச் சேவைகள் என்பவற்றைக் குத்தகைக்கு வழங்குவதற்கான**

## மீள் கேள்வி அறிவித்தல்-2022 (01.01.2022-31.12.2022)

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி கடைகள் 01.01.2022 ஆம் திகதி முதல் 31.12.2022 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட மீள் கேள்விகள் யாழ்ப்பாணம் மாநகர சபையால் கோரப்படுகின்றது.

**கேள்விப் படிவக் கட்டணம்** - ரூபா 1,000.00
**கேள்விப் படிவம் விநியோகித்தல்** - 09.12.2021 - 22.12.2021 ( மு.ப. 9.00 - பி.ப.3.00 மணி வரை)
**கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளல்** - 23.12.2021 மு.ப. 10.00 மணி வரை
**கேள்வி திறத்தல்** - 23.12.2021 மு.ப.10.00 மணிக்கு

விண்ணப்பப் படிவத்தினை பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கடையின் பெயர் குறிப்பிடப்பட்டு மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களை சமர்ப்பிப்பவர்கள் மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்று முகவரியிட்டு 23.12.2021 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பித்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் ஒருவர் சமுகமளிக்கலாம்.

### இறைச்சிக்கடை , பல்பொருள் வாணிபம் மீள் கேள்வி - 2022

| இல | இறைச்சிக்கடை, பல்பொருள் வாணிபம் | கடை.இல | மீளளிக்கக்கூடிய கேள்விப் பிணைப்பணம் | ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| 01 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 213,100.00 |
| 02 | பண்ணை கருவாட்டுக்கடை | இல.02 | 5,000.00 | 49,629.87 |
| 03 | பண்ணை கோழிக்கடை | இல.07 | 5,000.00 | 826,956.00 |
| 04 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.08 | 5,000.00 | 100,500.00 |
| 05 | பண்ணை மாட்டிறைச்சிக்கடை | இல.09 | 5,000.00 | 970,600.00 |
| 06 | செங்குந்தா கருவாட்டுக்கடை | இல.01 | 5,000.00 | 154,691.00 |
| 07 | செங்குந்தா கோழியிறைச்சிக்கடை | இல.02 | 5,000.00 | 311,000.00 |
| 08 | செங்குந்தா கோழியிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 417,819.00 |
| 09 | செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 607,340.70 |
| 10 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 681,074.45 |
| 11 | புங்கன்குளம் ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 160,000.00 |
| 12 | நாவாந்துறை கோழிக்கடை | இல.10 | 5,000.00 | 438,050.00 |
| 13 | அரியாலை ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 63,206.67 |
| 14 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 7,000.00 | 632,950.00 |
| 15 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.05 | 7,000.00 | 525,100.00 |
| 16 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 7,000.00 | 500,175.00 |
| 17 | குருநகர் பன்றி இறைச்சிக்கடை | | 5,000.00 | 350,728.00 |
| 18 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.04 | 5,000.00 | 305,414.55 |
| 19 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.05 | 5,000.00 | 271,479.60 |
| 20 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.07 | 5,000.00 | 190,884.10 |
| 21 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.08 | 5,000.00 | 169,802.02 |
| 22 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.09 | 5,000.00 | 188,593.49 |
| 23 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.11 | 5,000.00 | 56,332.02 |
| 24 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.12 | 5,000.00 | 9792.35 |

### சிற்றுண்டிச்சாலைகள் , பொதுச்சந்தை மீள் கேள்வி - 2022

| இல | துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையங்கள், சிற்றுண்டிச்சாலைகள், பொதுச்சந்தை | மீளளிக்கக்கூடிய கேள்விப் பிணைப்பணம் | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|
| 01 | செங்குந்தா சந்தை | 10,000.00 | 7,536,000.00 |
| 02 | நாவாந்துறை மீன் சந்தை | 10,000.00 | 606,000.00 |
| 03 | பாசையூர் மீன் சந்தை | 2,000.00 | 360,000.00 |
| 04 | பண்ணை கடற்கரைப்பூங்கா சிற்றுண்டிச்சாலை | 15,000.00 | 1,500,000.00 |
| 05 | யாழ்.பழைய பூங்கா சிற்றுண்டிச்சாலை | 1,000.00 | 425,612.00 |
| 06 | யாழ்.பொது நூலக சிற்றுண்டிச்சாலை | 5,000.00 | 261,819.00 |
| 07 | துரையப்பா விளையாட்டு அரங்கத்தில் நிகழ்வுகளின் போது நடாத்தப்படும் சிற்றுண்டிச்சாலை (நாள் ஒன்றிற்கான கட்டணம்) | 1,000.00 | 11,461.19 |

### விளம்பர ஒலிபரப்புச் சேவைகள் குத்தகைக்கு 2022.01.01 - 31.12.2024 (மூன்று வருடம்)

| இல | ஒலிபரப்பு விபரம் | கேள்வி அடையாள இலக்கம் | மதிப்பிடப்பட்ட ஆகக்குறைந்த கேள்வித் தொகை | கேள்விப் பிணைமுறி விபரம் | |
|---|---|---|---|---|---|
| | | | | தொகை ரூபா | செலுத்தியிருக்கும் காலம் |
| 01 | நவீன சந்தை கட்டடத்தொகுதி மேல்மாடி | MC/N.M.B/F-08/B.01/2021 | 1.5 மில்லியன் (1,500,000.00) | 30,000.00 | 09.02.2022 |
| 02 | செங்குந்தா சந்தைத் தொகுதியில் மீன் சந்தைக்கு மேல் | MC/S.M/F-08/B.02/2021 | 0.5 மில்லியன் (500,000.00) | 10,000.00 | 09.02.2022 |

மேலதிக தகவல்களை மாநகர சபையின் நானாவித இறைவரிப்பகுதியுடன் தொலைபேசி இலக்கம் 021 221 5978 தொடர்புகொண்டு அல்லது அலுவலக நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் - பி.ப. 3.00 மணிவரை நேரடியாக சமுகமளித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர், பெறுகைக்குழு,**
**மாநகர சபை , யாழ்ப்பாணம்.**

(C-3201)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எட்டுவகையான பிளாஸ்ரிக்,பொலித்தீன் பொருட்களுக்கு விரைவில் தடை

### சுற்றாடல் அமைச்சு

(கொழும்பு)

பிளாஸ்ரிக் மாலைகள் மற்றும் இடியப்பத் தட்டுகள் உட்பட 8 பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் தொடர்பான பொருட்களை தடை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக சுற்றாடல் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

பிளாஸ்டிக் மாலைகள் தடை செய்யப்பட்டதன் பின்னர், இயற்கை அல்லது எண்ணெய்க் காகித மலர்களைக் கொண்டு மாலைகள் தயாரிக்க உற்பத்தியாளர்களை அரசாங்கம் ஊக்குவிக்கும் என அமைச்சர் அமரவீர தெரிவித்தார்.

பிளாஸ்டிக்கிற்கு பதிலாக இயற்கை மூலப்பொருட்களிலிருந்து சரம் கொப்பரை தட்டுகளை உற்பத்தி செய்வதை அரசாங்கம் ஊக்குவித்து வருவதாகவும் அமைச்சர் அமரவீர தெரிவித்தார்.

இந்த தயாரிப்பை பிரபலப்படுத்துவதற்கான சாத்தியமான திட்டங்களை ஏற்கனவே அடையாளம் கண்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

பொலித்தீன் பைகளுக்கு தடை விதிக்கப்படும் என்றும், அதற்கு பதிலாக மக்கக்கூடிய பை அறிமுகப்படுத்தப்படும் என்றும் அமைச்சர் அமரவீர தெரிவித்தார். இலங்கையில் நாளாந்தம் சுமார் 20 மில்லியன் பொலித்தீன் பைகள் சுற்றுச்சூழலுக்கு வெளியிடப்படுவதாக அவர் கூறினார். (4)

## கட்டாக்காலி கால்நடை உரிமையாளர்களுக்கு அபராதம் அறவிடப்படும்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டமெங்கும் கட்டாக்காலி கால்நடைகள் அதிகரித்துள்ளதாகவும் இதனால் பல்வேறு சிரமங்களுக்கு முகங்கொடுப்பதாகவும் மக்கள் தொடர்ச்சியாக குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றனர்.

இந் நிலையில் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் 75 கட்டாக்காலி கால்நடைகள் பிரதேச சபையினால் பிடிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு பிடிக்கப்பட்ட கால்நடைகளின் உரிமையாளர்களிடம் இருந்து அபராதம் அறவிடப்படும் என்றும் பிரதேச சபையினர் தெரிவித்துள்ளார்கள்.

கால்நடை வளர்ப்பவர்கள் தங்கள் கால்நடைகளை கட்டி வளர்க்குமாறும் பிரதேச சபையினர் அறிவித்துள்ளார்கள்.

கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்தும் நடவடிக்கைக்கு பண்ணையாளர்களும் பொதுமக்களும் ஒத்துழைக்குமாறு பிரதேச சபை தவிசாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (5-6-281)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் ஆங்கிலமொழி மற்றும் ஆங்கில இலக்கிய டிப்போளமா கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இக்கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் 18 வயதிற்கு மேற்பட்டவராக இருப்பதுடன் க.பொ.த (உ/த) பரீட்சையில் ஒரே தடவையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களை www.ou.ac.lk என்னும் இணையத்தள முகவரியில் பிரவேசித்து 12.01.2022 வரை விண்ணப்பிக்க முடியும். மேலதிக விபரங்களிற்கு யாழ்ப்பாணப் பிராந்திய நிலையம் பிறவுண் வீதி கொக்குவில் எனும் முகவரியூடாகவும் மற்றும் 021-222 3374 தொலைபேசியூடாகவும் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்க முடியும் என யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப்பணிப்பாளர் கே.கந்தவேள் அறிவித்துள்ளார். (4)

## +757...

னாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 569,928 ஆக அதிகரித்துள்ளது. (ம)

## 28 பேர்...

றுக்குள்ளாகி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 14,533 ஆக அதிகரித்துள்ளது.(ம)

## விபத்துக்குள்...

படுகாயமடைந்த ஆசிரியர் சிகிச்சை பலனின்றி நேற்று புதன்கிழமை பிற்பகல் யாழ்.போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

கடந்த 28ஆம் திகதி புத்தூர்ச் சந்திப் பகுதியில் வீதியைக் கடக்க முற்பட்ட மந்துவில் பகுதியைச் சேர்ந்த கிளிநொச்சி இந்துக் கல்லூரி ஆசிரியரான க.சுதாகரன் ஏ9 வீதியால் வேகமாகப் பயணித்த மோட்டார் சைக்கிள் மோதியதில் தலையில் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (ம-30)

## இலங்கை மற்றும்...

ஹூ வேய், சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தனவை நேற்று சந்தித்துக் கலந்துரையாடினார்.

பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் இடம்பெற்ற இந்த சந்திப்பில் சீனா மற்றும் இலங்கைக்கிடையிலான இருதரப்பு உறவுகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

மேலும் சீனாவின் உதவித் திட்டங்கள், நன்கொடைகள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. (ம)

## இந்திய முப்படை...

தமிழகத்தின் நீலகிரியில் இந்திய விமானப்படை ஹெலிகொப்டர் நேற்று விழுந்து நொருங்கிய விபத்தில் இந்தியாவின் முப்படை தலைமை தளபதி பிபின் ராவத் உயிரிழந்துவிட்டதாக இந்திய அரசு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

அத்துடன், பிபின் ராவத் உட்பட 13 பேர் இந்த விபத்தில் உயிரிழந்தமையும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவின் முதல் முப்படை தலைமைத் தளபதியாக ஜெனரல் பிபின் ராவத் கடந்த 2019ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நியமிக்கப்பட்டார்.

நேற்று தமிழகம் - குன்னூரில் விபத்திற்குள்ளான Mi-17v5 ஹெலிகொப்டரில் இவர் தன் குடும்பத்தோடு முற்பகல் பயணம் மேற்கொண்டிருந்தார்.

இந்நிலையில் ஹெலிகொப்டர் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானதில் இந்தியாவின் முப்படைத் தலைமைத் தளபதி மற்றும் அவரது மனைவி உட்பட அதில் பயணம் செய்த 13 பேர் உயிரிழந்துள்ளனர்.

வெலிங்டனில் உள்ள பாதுகாப்பு படைகளின் ஊழியர்களுக்கான கல்லூரியில் நடக்க இருந்த ஒரு நிகழ்வுக்காக பிபின் ராவத் சென்று கொண்டிருந்தபோது இந்த விபத்து நடந்துள்ளது.

பிபின் ராவத் மற்றும் பிறரின் மரணத்துக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த், பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், உள்துறை அமைச்சர் அமித் ஷா உள்ளிட்ட முக்கிய தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

**யார் இந்த பிபின் ராவத்?**

பிபின் லக்ஷ்மன் சிங் ராவத் 1958ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16ஆம் திகதி பிறந்தார். அவர் பிறந்த ஊர் இப்போதைய உத்தராகண்ட் மாநிலத்தில் இருக்கும் பௌடி.

இந்தியாவின் முதல் முப்படை தலைமைத் தளபதியாக ஜெனரல் பிபின் ராவத் கடந்த 2019ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நியமிக்கப்பட்டார். அதற்கு முன் இந்திய இராணுவத் தளபதியாக இவர் இருந்தார்.

ஜெனரல் பிபின் ராவத், தேசிய பாதுகாப்பு மற்றும் தலைமைப் பண்பு குறித்து பல்வேறு கட்டுரைகளை எழுதியுள்ளார். அது பல பத்திரிகைகளில் வெளியாகியுள்ளது. சென்னை பல்கலைக்கழகத்தில் பாதுகாப்பு குறித்த படிப்பில் அவருக்கு எம்.ஃபில் பட்டம் வழங்கப்பட்டது. மேலாண்மை மற்றும் கணினி அறிவியலில் பட்டயப்படிப்பை முடித்துள்ளார்.



அவருடைய 40 ஆண்டுகளுக்கும் மேலான இராணுவப் பணியில், பரம் விஷிஸ்ட் சேவா, உத்தம் யுத் சேவா, அதி விஷிஸ்ட் சேவா, யுத் சேவா, சேனா, விஷிஸ்ட் சேவா, சிறப்புச் சேவை விருது, ஆபரேஷன் பராக்ரம், சைன்ய சேவா உட்பட பல பதக்கங்களைப் பெற்றுள்ளார்.

1978ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம் திகதி யன்று அவருடைய தந்தை பணியாற்றிய படையிலேயே இரண்டாவது லெப்டினன்ட்டாகப் பதவியேற்றவர், லெப்டினன்ட் (1980), கேப்டன்(1984), மேஜர்(1989), லெப்டினனன்ட் காலனெல் (1998), காலனெல் (2003), ப்ரிகேடியர் (2007), மேஜர் ஜெனரல் (2010), லெப்டினண்ட் ஜெனரல் (2014), தலைமைத் தளபதி (2017) என்று பல்வேறு படிநிலைகளில் உயர்ந்து, 2019 ஆம் ஆண்டு முப்படைகளுக்குமான தளபதியாகப் பதவி ஏற்றார் பிபின் ராவத். (ம)

## யாசகம் எடுக்கும்...

இதனைக் கூறியுள்ளார். தொடர்ந்தும் பேசிய அவர்,

"புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளுக்கு சிறு கைத்தொழில் அல்லது வங்கிக் கடன், ஊவா தொழில் வாய்ப்பு வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்டது. அந்த உறுதிமொழி நிறைவேற்றப்படவில்லை.

இன்று வறுமையால் அவர்கள் மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ளனர். புனர்வாழ்வுபெற்ற சிலர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். பலர் கையேந்தி பிச்சையெடுக்கும் அவல நிலைமை ஏற்பட்டுள்ளது. எனவே வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றுங்கள்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

## வெளிப் பொறி...

கைக்கு வழங்கும் ஆதரவை எப்போதும் மதிப்பதாக அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் தெரிவித்தார்.

பலமான உள்நாட்டுப் பொறிமுறைகள் மூலம் வலுவாக முன்னோக்கிச் செல்லும் இவ்வேளையில் இலங்கை எந்தவொரு வெளிப் பொறிமுறையையும் ஏற்றுக்கொள்ளாது என்பதையும் அமைச்சர் ஜி.எல். பீரிஸ் வலியுறுத்தினார். (ம)

## நோர்வே தூது...

ழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சிலர் நேற்று சந்தித்துள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் மற்றும் அக்கட்சியின் ஊடகப் பேச்சாளர் சுரேந்திரன் குருசாமி ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.

தற்போதுள்ள அரசியல் சூழ்நிலைகள் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் பற்றி இதன்போது விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் அரசியல் உரிமை சார்ந்து தொடர்ந்து உறுதியான ஆதரவு நிலைப்பாட்டில் உள்ள நாடான நோர்வேயுடன் தமிழ்த் தரப்பின் அரசியல் முக்கியத்துவம்வாய்ந்த இச்சந்திப்பு ஒரு மணி நேரம் நடைபெற்றதாக ரெலோ விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## பண்டிகைக்...

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

தற்போது பாரியளவில் தொற்றாளர் எண்ணிக்கை அதிகரிக்காவிட்டாலும், நாளாந்தம் இனங்காணப்படும் தொற்றாளர் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்படாமை அவதானம் செலுத்த வேண்டிய விடயமாகும் என்றும் அவர் கூறினார்.

## உயிரி...

னாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம)

## தொல்...

வேளை திடீரென கட்டடத்திலிருந்து கீழே விழுந்துள்ளான்.

இந்நிலையில், குறித்த சிறுவன் மூளாய் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் சிறுவன் உயிரிழந்துள்ளான்.

இச்சம்பவத்தில் ஜெயச்சந்திரன் தஜிதரன் (வயது-11) என்ற சிறுவனே இவ்வாறு பரிதாபமாக உயிரிழந்துள்ளான். (ம)

## எரி...

வோர் சேவை அதிகாரசபையானது தற்போதைய அரசாங்கத்தின்கீழ் அரசாங்கத்தை பாதுகாக்கும் இடத்திற்கு சென்றுள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

அம்பலாங்கொடையில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இதனை அவர் தெரிவித்தார். (ம)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 08/12/2021
சீட்டிழுப்பு இலக்கம் 1178
வெற்றி இலக்கங்கள்
சிம்மம் 7 3 8 4 6 0
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 08/12/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0958
O 08 11 13 37 39

மஹஜன சம்பத
திகதி 2021/12/08
சீட்டிழுப்பு இலக்கம் 4610
Y 8 4 7 0 7 0

கொவிசெத
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 08.12.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2905
T 26 41 43 54

தன நிதானய
திகதி -2021.12.08
சீட்டிழுப்பு இலக்கம் - 640
X 01 19 22 43

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 108
சீட்டிழுப்பு திகதி 08.12.2021
புதன்கிழமை
வெற்றி இலக்கங்கள் 14 20 28
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,455,560/-

அத கோடிபதி
கிழமை புதன்கிழமை
சீட்டிழுப்பு இல. 1413
வர்ணம் இளஞ் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 08.12.2021
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,163,920
வெற்றி இலக்கங்கள் 08 13 49 71 L
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா
கிழமை புதன்கிழமை
சீட்டிழுப்பு இல. 3748
வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 08.12.2021
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,921,500
வெற்றி இலக்கங்கள் 32 33 51 72 P
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1587
சீட்டிழுப்பு திகதி 08.12.2021
நிறம் செம்மஞ்சள்
தினம் புதன்
W 22 27 57 70
அடுத்த சுப்பர் ஜக்பொட் : 73,769,968/=

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,397,690/=
திகதி 08.12.2021
வெற்றி வாரம் 3299
வர்ணம் பச்சை
வெற்றி இலக்கங்கள் 01 21 51 60 மீனம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9 934,220/=

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1792
சீட்டிழுப்பு திகதி 08.12.2021
வெற்றி இலக்கங்கள் 28 36 60 66 S
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 28,740,092/-
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பிரியந்த குமாரவின் சடலம் அடக்கம் செய்யப்பட்டது



(கொழும்பு)

பாகிஸ்தானில் கொடூரமாக கொல்லப்பட்ட பிரியந்த குமார தியவடனவின் சடலம் நேற்று மாலை கனேமுல்ல பகுதியில் உள்ள மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

பாகிஸ்தானின் சியல்கோர்ட் நகரில் தொழிற்சாலை முகாமையாளராகப் பணியாற்றி வந்த 48 வயதான பிரியந்த குமார கடந்த வெள்ளிக்கிழமை அடித்துக் கொல்லப்பட்டு அவரது உடல் எரியூட்டப்பட்டது.

இந்நிலையில், பாகிஸ்தான் லாகூரியிலிருந்து புறப்பட்ட யு.எல்.186 என்ற இலக்கத்தைக் கொண்ட ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் விமானம் மூலம் அவரது உடலைத் தாங்கிய பேழை நாட்டிற்கு கொண்டுவரப்பட்டது.

பிரேத பரிசோதனையின் பின்னர் பிரியந்தவின் சடலம் உறவினர்களிடம் அஞ்சலிக்காக ஒப்படைக்கப்பட்டதுடன், சடலம் வீட்டிற்கு கொண்டு வரப்பட்டு பெரும்பாலானோரின் கண்ணீருக்கு மத்தியில் அஞ்சலி செலுத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில், பெரும்பாலானோரின் கண்ணீருக்கு மத்தியில் நேற்று மாலை கனேமுல்ல பகுதியில் இறுதிக் கிரியைகள் இடம்பெற்று சடலம் அடக்கம் செய்யப்பட்டது. (ம)

## பாகிஸ்தானில் மேலும் ஒரு வெறியாட்டம்

# 4 பெண்களை நிர்வாணமாக்கி வீதிகளில் அடித்து இழுத்துச் சென்ற கொடூரம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் நான்கு பெண்களை நிர்வாணமாக்கிய கும்பல், அப்பெண்களை குச்சிகளால் அடித்து ஊர்வலமாக இழுத்துச்சென்ற வீடியோ சமூக வலைத்தளத்தில் பரவி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணம் ஃபைசலாபாத்நகரில் உள்ள கடை வீதியில் 4 பெண்களை நிர்வாணமாக்கி ஊர்வலமாக அழைத்துச் சென்ற வீடியோ வைரலாகியுள்ளது.

அந்த வீடியோர்வில் பதின் பருவத்தைச் சேர்ந்த பெண் உட்பட நான்கு பெண்களை ஆடைகளை அவிழ்த்து நிர்வாணமாக்கி, குச்சிகளால் சிலர் அடித்தும் தர தரவென இழுத்தும் ஊர்வலமாக அழைத்துச் செல்கின்றனர். அந்தக் கும்பலைச் சேர்ந்தவர்கள் யாரும் அப்பெண்களுக்கு உதவாமல் இருந்தது காண்போரை கலங்கச் செய்துள்ளது.

அந்தப் பெண்கள் சுமார் ஒரு மணி நேரம் இந்த கொடூரத்தை அனுபவித்ததாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன. இந்த வீடியோ சமூக வலைத்தளங்களில் பரவி அதிர்ச்சியை ஏற்படுத்திய நிலையில் பஞ்சாப் மாகாண பொலிஸார் இதில் தொடர்புடைய சிலரைக் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட பெண் ஒருவர் உள்ளூர் செய்தி நிறுவனத்திடம் நடந்த சம்பவங்கள் குறித்து விவரித்துள்ளார். அவர் கூறியிருப்பதாவது, "அன்றைய தினம் பாவா சாக் நகரப் பகுதிக்கு குப்பை பொருட்களை சேகரிக்க சென்றோம். மிகவும் தாகமாக இருந்ததால் கடையொன்றுக்கு சென்று தண்ணீர் கேட்டோம்.

ஆனால் தண்ணீர் கேட்ட எங்களை திருட வந்தவர்களாக நினைத்த அக்கடையின் உரிமையாளர் சிலருடன் சேர்ந்து தாக்கினார்.

எங்களை குண்டுக்கட்டாக தூக்கி ஆடைகளை அவிழ்த்து நிர்வாணமாக்கி, குச்சிகளால் அடித்து சாலைகளில் ஊர்வலமாக கூட்டிச் சென்றனர். அங்கிருந்த ஒருவர்கூட எங்களுக்கு உதவவில்லை" என அவர் தெரிவித்துள்ளார். (ம)

# பிம்ஸ்டெக் பொதுச் செயலாளருடன் ஜனாதிபதி கோட்டா சந்திப்பு



(கொழும்பு)

பல்துறை தொழில்நுட்பம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான வங்காள விரிகுடா (பிம்ஸ்டெக்) கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் டென்சின் லெக்ப்ஹெல் (Tenzin Lekphell) அவர்கள், நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களைச் சந்தித்தார்.

கடந்த வருடம் நவம்பர் 06 ஆம் திகதி பிம்ஸ்டெக் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்ட லெக்ப்ஹெல் அவர்களின் இலங்கைக்கான முதலாவது விஜயம் இதுவாகும்.

2018 - 2020ஆம் ஆண்டுக் காலப்பகுதியில், பிம்ஸ்டெக்கின் தலைமைத்துவம் இலங்கைக்கு கிடைத்தது. அக்காலத்தில் ஆரம்ப உறுப்பினராக இருந்துகொண்டு பிம்ஸ்டெக் அமைப்புக்காக இலங்கை வழங்கிய ஒத்துழைப்பை, பொதுச் செயலாளர் டென்சின் லெக்ப்ஹெல் பாராட்டினார்.

பிம்ஸ்டெக் அமைப்பின் ஊடாகக் கட்டியெழுப்பப்படுகின்ற பிராந்திய ஒத்துழைப்பு பயன்மிக்கதாக அமைய வேண்டும். அதேபோன்று, பிராந்தியத்தில் வாழ்கின்ற மக்களுக்கு அதன் பிரதிபலன்கள் நேரடியாக வழங்கப்படக்கூடிய வகையில் அங்கத்துவ நாடுகளுடனும் பொதுச்செயலாளர் அலுவலகத்துடனும் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக ஜனாதிபதி அவர்கள் பொதுச் செயலாளர் அவர்களிடம் தெரிவித்தார்.

பிம்ஸ்டெக்கின் எதிர்கால நடவடிக்கைகளுக்காக அங்கத்துவ நாடுகளுக்கிடையில் முக்கியமான துறைகளைப் பகிர்ந்து கொள்ளுதல் வேண்டும். விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கப் பிரிவு என்பன இலங்கைக்குரிய பிரதான பிரிவுகளாகும். அதற்கான செயற்பாட்டுத் திட்டமொன்றை எதிர்வரும் ஓரிரண்டு மாதங்களில் முன்வைப்பதற்கு திட்டமிட்டிருப்பதாகவும் ஜனாதிபதி அவர்கள் தெரிவித்தார். (ம)

# கிளிநொச்சியில் பணியாற்றிய சிப்பாய் மரணம்

(கொழும்பு)

கிளிநொச்சியில் பணியாற்றிய இராணுவச் சிப்பாய் ஒருவர் விபரீத முடிவெடுத்ததில் உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி இராணுவ முகாமிலிருந்து விடுமுறைக்கு வெல்லவாயவில் உள்ள தனது வீட்டுக்குச் சென்ற இராணுவச் சிப்பாய்ஒருவர், தூக்கிட்டு தற்கொலைசெய்துகொண்டுள்ள சம்பவம் ஒன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

வெல்லவாய கரந்தகொல்லைப் பகுதியைச் சேர்ந்த ஆர். எம். மதுசான் என்ற 21 வயதுடைய இராணுவச் சிப்பாயே, இவ்வாறு தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

இது குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (8957)

076 825 7716 (ஆகாஸ்)

VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்

✓ ONLINE APPLICATIONS
✓ VISA APPOINTMENTS
✓ PASSPORT APPLICATION
✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும். (C-3169)

STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA

கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா

Srilankan Visa Extension வெளிநாட்டு Passport க்கு இலங்கை விசா நீட்டித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS 49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம். V2 TRAVELS

0777-068-777

காணி விற்பனைக்கு

கோப்பாய் – உரும்பிராய் பிரதான வீதியில் இருந்து 500 M தூரத்தில் 4 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு.

1 1/2 பரப்பாக பிரித்து வழங்கப்படும்.

(உரும்பிராய் கிருஸ்ணன் கோவில் சந்தி அருகாமை) (8986)

தொடர்புகளுக்கு

077 658 5999, 077 911 6983

(C-3204)

2D-Drawing Civil &
3D-Modeling Mech
Auto CAD

LINK:077 5116320 - 071 8617972

விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

UK-975 /=Kg

எமது நேரடிக்கிளைகள்

• யாழ்ப்பாணம் • புத்தூர் • கோப்பாய் • நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய் • புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • கிளிநொச்சி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • சாவகச்சேரி (C-3132)

0768226240 DHL

IELTS DMI COMPUTER EDUCATION 0777 17 35 17

#Student VISA மூலம் வெளிநாடு செல்வோருக்கானது
# Unique Test Tips
# 40 hrs with free 4 mock exam
# Latest course Material (Book 16)

Academic or General

IELTS Life Skills - A1

திருமணம் செய்து UK செல்வோருக்கானது

DMI , British Council இன் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை பதிவு மையமாகும்

யாழில் ஆங்கிலக்கல்விக்கு No.1 பயிற்சி மையம்

DIPLOMA IN ENGLISH

புதிய பிரிவு ஆரம்பம் 8/12/2021 Wed 9:30 am

SPOKEN ENGLISH நேரடி வகுப்புக்களாக

German - Germany ,Swiss நாட்டுக்கு செல்வோருக்கு Deuctsch

French - France நாட்டுக்கு செல்வோருக்கு (C-3187)

DMI COMPUTER EDUCATION

யாழ்ப்பாணம் No.113, 0777 24 07 07 021 222 4403

நெல்லியடி 021 226 2470 - 0777577333 | சாவகச்சேரி 021 227 0775 0777227074 | சுன்னாகம் 021 224 1970 0776032300 | சிறுப்பிட்டி 021 225 6665 0761354503 | 021 228 5655 0776398096

காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சுன்னாகம் கந்தரோடைப் பகுதியில் கணக்கர் வளவு 14 பரப்பு காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)

2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடிப் பாதையுடன் சுன்னாகம் பஸ் நிலையத்தில் இருந்து 800 மீற்றர் தூரம்

பார்வையிடும் நேரம்

காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை (தரகர் தேவையில்லை) விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (8981)

தொடர்புகளுக்கு

077 814 7389, 077 614 7333

காணி விற்பனைக்கு

யாழ். சுன்னாகம் நகரத்தின் மத்தியில் K.K.S வீதியில் இருந்து 200 மீற்றர் தூரத்தில் (இலங்கை வங்கி முன் வீதியில்) 14 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

(1 1/2 பரப்பாக பிரித்து வழங்கப்படும்.) (8987)

தொடர்பு

076 890 9259

077 015 0353


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.12.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.